Reg. No. 1-M.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

I-A வது பாகத்தின் ஸப்ளிமென்ட்.

SUPPLEMENT TO PART I-A OF THE FORT ST. GEORGE GAZETTE.

SEPTEMBER 16, 1930.

ந. 37.] மதராஸ்: செவ்வாய்க்கிழமை மாலை, 1930-ம் வருஷம் ஸெப்டெம்பர்மீ 16வ. [PRICE, 2 *annas*.

கவர்ன்மென்ட் விளம்பரங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு.

Tamil Translation of Notifications by Government.

லோகல் ஸெல்ப் கவர்ன்மென்ட் டிபார்ட்மென்ட்.

விளம்பரம்.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1930-ம் வருஷம் ஜூன்மீ 5வ (1395-ம் ந. P. H., கவர்ன்மென்ட் உத்தரவு).

நெ. 1540.—வெறிகொண்ட நாய் முதலிய பிராணிகளின் கடிக்காக செய்யும் சிகிச்சைக்குச் சம்பந்தப்பட்ட திருத்தமான யாதாஸ்தும் விதிகளும்.

I-ம் அனுபந்தம்.

வெறிகொண்ட நாய் முதலிய பிராணிகளின் கடிக்காக சிகிச்சை செய்துகொள்ள விரும்பும் வியாதியஸ்தர்கள் அறிந்து அனுசரிப்பதற்கான சங்கதிகள் அடங்கிய யாதாஸ்து.

வியாதியஸ்தர்கள் ஒரு பிராணியினால் கடிக்கப்பட்டிருந்து, அந்தப் பிராணி அதற்குப் பிறகு காணுமற்போயிருக்கும்பட்சத்திலாவது கொல்லப்பட்டிருக்கும்பட்சத்திலாவது அந்த பிராணி வெறிகொண்டிருக்குமென்று சந்தேகம் உண்டானால், அவர்கள் உடனே வெறிகொண்ட பிராணியின் கடிக்குச் சிகிச்சை செய்துகொள்ளவேண்டும். இதர விஷயங்களில் அவர்கள் சிகிச்சை செய்துகொள்ளுவதாகத் தீர்மானிப்பதற்கு முன்னே அடியிற்கண்ட அம்சங்களைப்பற்றி ஆலோசிப்பது நல்லது :—

(i) வெறிகொண்ட பிராணி பார்வைக்கு பயங்கரமாயிருக்கலாம் அல்லது அதற்குத் திமிர்வாயு காணலாம்;

(ii) ஒரு பிராணி தண்ணீரைக் கண்டு பயப்படாமலே வெறிகொண்டிருக்கலாம்;

(iii) ஒரு பிராணிக்கு வெறி பிடிப்பதற்குப் பத்து தினங்களுக்கதிகமாக முன்னதாய் அந்த வியாதி ஒருபோதும் வேறொருவருக்குத் தொத்திக்கொள்ளுகிறதில்லை;

(iv) கடித்த இடங்களில் அதனால் தோல் பிளவுபட்டிருந்தாலும், புதிதான ஒரு காயத்தில் உமிழ்நீர் பட்டிருந்தாலும் மாத்திரமே சிகிச்சை அவசியமாகும;

(v) அந்த நபர் கடிபட்டு இரண்டு மாதமான பிறகு வியாதி தொத்திக்கொள்ளுமென்கிற பயம் மிகவும் குறைந்துவிடுகிறது;

(vi) அந்தப் பிராணி வெறிகொண்டிருக்கிறதென்று நிச்சயமாய் ஏற்படுகிறவரையில் அதை ஒருபோதும் கொல்லக்கூடாது; ஆனால், அது வேறே யாரையும் கடிப்பது சாத்தியமாயிராதபடி பார்த்துக்கொள்ளவேண்டும்; எவரையாவது கடித்தபிறகு அது பத்து நாள் பிழைத்திருக்குமானால், சிகிச்சை ஒன்றும் அவசியமில்லை;

(vii) யாதொரு நாய் வெறிகொண்டிருப்பதாக சந்தேகம் ஏற்பட்டால் அதன் மூளையைப் பரிசோதிக்கிறவரையில் காத்திருக்கக்கூடாது; ஏனென்றால், அந்தப்படி பரிசோதிப்பதனால் வியாதிக் குறிகள் எதுவும் இல்லையென்று ஏற்படுவது முடிவானதாகாது.

(viii) நாய் வெறிகொண்டிருப்பதாக சந்தேகம் ஏற்பட்டாலுஞ்சரி ஏற்படாவிட்டாலுஞ் சரி, கடித்த பின்பு கூடியசீக்கிரத்திலே

காயத்தை நன்றாய்க் கழுவி உலரவைத்துப் பிறகு அதை முழுவதும் சுட்டுவிடவேண்டும். இதுவிஷயமாய் உபயோகப்படுத்தக்கூடிய வஸ்துக்களில் மிகச்சிறந்தது கலப்பற்ற (carbolic acid) கார்பாலிக் ஆஸிடாகும். ஏனென்றால், அது நன்றாய் ஊடுருவிச்சென்று, விஷநீரைச் சீக்கிரத்தில் அழித்துவிடுகிறது. மேலும், அது பட்ட இடத்தில் நோவு தெரியாமற்செய்யும் மருந்தாகையால், அது கொஞ்சநேரத்துக்கும்மட்டும் காயத்தில் எரிச்சலை உண்டாக்குகிறது. கலப்பற்ற கார்பாலிக் ஆஸிட் கிடைக்காமற்போகும்பட்சத்தில், (ஸ்படிக ரூபமாகவாவது பூரித திராவக ரூபமாகவாவதுள்ள) பெர்மாங்கனேட் ஆவ் பொடாஷ், கலப்பற்ற நைட்ரிக் ஆஸிட், ஸில்வர் நைட்ரேட் முதலியவைகளை உபயோகிக்கலாம்; ஆனால், அவை கலப்பற்ற கார்பாலிக் ஆஸிடைப்போல அவ்வளவு பலன் தரக்கூடியவையல்ல. கடித்த பிறகு எவ்வளவு சீக்கிரமாக காயம் சுடப்படுகிறதோ அவ்வளவு அதிகமாக அதனால் வெகுசாய் பலன் ஏற்படக்கூடும்.

2. சிகிச்சை செய்துகொள்ளத் தீர்மானித்த பிறகு, அதிசமீபத்திலுள்ள அல்லது அதிசுலபமாய்ப் போகக்கூடிய சிகிச்சைச்சாலையில் சிகிச்சை செய்துகொள்ளும் விஷயத்தில் காலதாமதம் செய்யக்கூடாது.

3. குன்னூரிலுள்ள பாஸ்சர் இன்ஸ்டிட்யூட் என்னும் வைத்தியசாலையிலும், (ஜில்லாவின் தலைமை ஸ்தானத்திலிருக்கும்) சகல டிஸ்ட்ரிக்ட் ஹெட்க்வார்ட்டர் ஆஸ்பத்திரிகளிலும், சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியிலும், மலையாளம் ஜில்லாவில் தலைச்சேரியிலும் கொச்சியிலும், தஞ்சாவூர் ஜில்லாவில் நாகபட்டணத்திலும், மதுரை ஜில்லாவில் கொடைக்கானலிலும், கிழக்குக் கோதாவரி ஏஜென்ஸியில் பத்திராசலத்திலுமுள்ள கவர்ன்மென்ட் ஆஸ்பத்திரிகளிலும் வெறிகொண்ட நாய் முதலிய பிராணிகளின் கடிக்குச் சிகிச்சை செய்யப்படுகிறது. நீலகிரி ஜில்லாவிலே, குன்னூரிலுள்ள பாஸ்சர் இன்ஸ்டிட்யூட்டில் சாதாரணமாய் சிகிச்சை செய்யப்படுகிறது; உதகமண்டலத்திலுள்ள ஹெட்க்வார்ட்டர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்யப்படுவெதில்லை. கீழே குறிப்பிட்டிருக்கும் மிஷன் ஆஸ்பத்திரிகளில்கூட சிகிச்சை செய்யப்படுகிறது:—

அமெரிக்கன் பாப்டிஸ்ட் மிஷன் ஆஸ்பத்திரி, ஓங்கோல், குன்டூர் ஜில்லா.

கனேடிய பாப்டிஸ்ட் மிஷன் ஆஸ்பத்திரி, ஆகிடு, மேற்குக் கோதாவரி ஜில்லா.

கனேடிய பாப்டிஸ்ட் மிஷன் ஆஸ்பத்திரி, ஸ்ரீகாகுளமு, மேற்குக் கோதாவரி ஜில்லா.

கனேடிய மிஷன் ஆஸ்பத்திரி, ஸோம்பேடா, கஞ்சம் ஜில்லா.

கனேடிய பாப்டிஸ்ட் மிஷன் ஆஸ்பத்திரி, உய்யூரு, கிருஷ்ணா ஜில்லா.

சர்ச் ஆவ் இங்க்லண்ட் ஜெனானா மிஷன் ஆஸ்பத்திரி, பங்களூர்.

டேனிஷ் மிஷன் ஆஸ்பத்திரி, திருக்கோயிலூர், தென்னாற்காடு ஜில்லா.

கோதாவரி டெல்டா மிஷன் ஆஸ்பத்திரி, நரஸபூர், மேற்குக் கோதாவரி ஜில்லா.

கன்னட இவாஞ்ஜெலிகல் மிஷன் ஆஸ்பத்திரி, உடுப்பி, தென்கன்னடம்.

லண்டன் மிஷன் ஆஸ்பத்திரி, ஜம்மலமடுகு, கடப்பை ஜில்லா.

லண்டன் மிஷன் ஆஸ்பத்திரி, ஈரோடு; கோயம்புத்தூர் ஜில்லா.

லண்டன் மிஷன் ஆஸ்பத்திரி, சிக்க பல்லபுரா, கோலார் ஜில்லா.

லெப்பர் (குஷ்டரோகி) ஹோம் - ஆஸ்பத்திரி, டிச்பாலி, நிஜாம் காரன்டீட் ஸ்டேட் ரெயில்வே, அதிமேன்மைபொருந்திய நிஜாம் அவர்களின் ராஜ்ஜியம்.

மேரி வாட்ட் லைவ்ஸ் ஆஸ்பத்திரி, அமெரிக்கன் ஆர்க்காட் மிஷன், மதனபல்லி, சித்தூர் ஜில்லா.

மெதாடிஸ்ட் எபிஸ்கோபல் மிஷன் ஆஸ்பத்திரி, கோவார் பட்டணம், கோலார் ஜில்லா.

நாஷனல் மிஷனரி ஸொஸைடி மிஷன் ஆஸ்பத்திரி, திருப்பத்தூர், வட ஆற்காடு ஜில்லா.

தென் திருவாங்கூர் மெடிகல் மிஷன் ஆஸ்பத்திரி (லண்டன் மிஷன் நெய்யூர், தென் திருவாங்கூர்).

யூனியன் மிஷன் ட்யூபர்குலோஸிஸ் (க்ஷயரோக) ஸானடோரியம், ஆரோக்கியவரம், சித்தூர் ஜில்லா.

யுனைடெட் ப்ரீ சர்ச் ஆவ் ஸ்காட்லண்ட் மிஷன் ஆஸ்பத்திரி, ஜால்னா, அதிமேன்மை பொருந்திய நிஜாம் அவர்களின் ராஜ்ஜியம்.

யுனைடெட் லூதரன் சர்ச் மிஷன் ஆஸ்பத்திரி, ராஜமந்திரி, கிழக்குக் கோதாவரி ஜில்லா.

வெஸ்லியன் மிஷன் ஆஸ்பத்திரி, ஈக்காடு, திருவள்ளூர், செங்கல்பட்டு ஜில்லா.

வெஸ்லியன் மிஷன் ஆஸ்பத்திரி, மேடாக், அதிமேன்மை பொருந்திய நிஜாம் அவர்களின் ராஜ்ஜியம்.

வெஸ்லியன் மிஷன் ஆஸ்பத்திரி, திருவள்ளூர், செங்கல்பட்டு ஜில்லா.

4. வெறிகொண்ட நாய் முதலிய பிராணிகளின் கடிக்குச் சிகிச்சை செய்துகொள்வதற்காக குன்னூரிலுள்ள பாஸ்சர் இன்ஸ்டிட்யூட்டுக்காவது ஷை மிஷன் ஆஸ்பத்திரிகளில் எதற்காவது போக விரும்புகிறவர்கள் தங்கள் சொந்த செலவில் போகலாம்.

5. பாஸ்சர் இன்ஸ்டிட்யூட்டில் சகல சிகிச்சையும் இலவசமாக செய்யப்படும். ஆனால், அந்த வைத்தியசாலையின் பராமரிப்புக்காக ஏதாகிலும் தொகை கொடுத்து உதவி புரியக்கூடிய நிலைமையிலுள்ள வியாதியஸ்தர்கள் அந்தப்படி உதவி புரிவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. பதினான்கு தினங்கள் வரையில் சிகிச்சை செய்யப்படும். மேலும், வியாதியஸ்தர்கள் படுத்துக்கொண்டே இருக்க வேண்டியதில்லை; ஆனால், தேக சௌக்கியத்துக்கு நல்லதென்று சொல்லப்படும் விதிகளைக் கவனித்து வழக்கம்போல் நடமாடிக்கொண்டிருக்கலாம்.

6. **குன்னூருக்குப் போகிறவர்கள் தெரிந்துகொள்வதற்கான சங்கதிகள்.**—(a) குன்னூரானது நீலகிரிமலையில் சமுத்திர மட்டத்துக்குமேல் சுமார் 6,000 அடி உயரத்தில் இருக்கிறது. மேட்டுப்பாளையத்திலிருந்து நீலகிரி ரெயில்வே மார்க்கமாய் சுமார் மூன்று மணி நேரத்தில் அங்கே போய்ச்சேரலாம்.

(b) மேட்டுப்பாளையம் தென் இந்திய ரெயில்வேயின் தென்மேற்குக் கிளையில் இருக்கிறது. அதற்குத் தென் இந்தியாவின் சகல பாகங்களிலிருந்தும் சுலபமாய்ப் போய்ச்சேரலாம். ஷை வைத்தியசாலையானது குன்னூர் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து சுமார் ஒரு மைல் தூரத்திலிருக்கிறது.

(c) **சீதோஷ்ண நிலைமை.**—குன்னூரின் சீதோஷ்ண நிலைமையானது-மார்ச் மாதம் முதல் ஸெப்டெம்பர் மாதம் வரையில் பாரன்ஹீட் சீதோஷ்ண அளவைக் கருவியின்படி 60 டிக்ரிக்குக் குறையாமலும் 75 டிக்கிரிக்கு மேற்படாமலும், அக்டோபர் மாதம் முதல் பெப்ரவரி மாதம் வரையில் ஷை அளவைக்கருவியின்படி 40 டிக்ரிக்குக் குறையாமலும் 60 டிக்ரிக்கு மேற்படாமலும் இருக்கிறது.

(d) சுமார் 70 அங்குலம் மழை பெய்கிறது. அதில் பெரும்பாலும் அக்டோபர், நவம்பர், டிஸெம்பர் மாதங்களில் வடகிழக்குப் பருவக்காற்று அடிக்கும்போது பெய்கிறது.

(e) சமபூமியிலிருந்து வருபவர்களுக்கு சுமாராய் உஷ்ணந்தாரத்தக்க உடுப்புகளும் படுக்கையும் வேணடியதேயொழிய, பளுவான உடுப்புகளும் படுக்கையும் வேண்டியதில்லை. ஏழைகளாயுள்ள இந்திய வியாதியஸ்தர்களுக்குக் கம்பளிகள் கொடுக்கப்படும்.

(f) **வசதியிடம்.**—பல ஹோட்டெல்களும் (சத்திரங்களும்), போர்டிங் ஹௌஸ் என்னும் போஜன சாலைகளும், வாசஞ் செய்வதற்கான ஒரு க்ளப்புங்கூட (residential club) இருக்கின்றன. ஷை ஹோட்டெல்களும் போஜனசாலைகளும் வருஷம் முழுவதும் திறந்திருக்கும்.

(g) ஐரோப்பியர்களும் ஆங்கிலோ இந்தியர்களும் ஷை வைத்தியசாலையிலேயே தங்கியிருக்க இடம் கொடுக்கப்படுவதில்லை. அவர்கள் சாப்பாட்டுக்காகவும் தங்கியிருப்பதற்கான இடத்துக்காகவும் சொந்த ஏற்பாடுகள் செய்துகொள்ளவேண்டும். இந்த விஷயத்தில் எவ்வித கஷ்டமுமில்லை. ஹோட்டெல் வீதப்படி செலவு செய்யச் சக்தியற்றவர்களாயிருப்பவர்களுக்கு வைத்தியசாலையிலிருந்து முக்கால் மைல் தூரத்துக்குள்ளாகப் பட்டணத்திலே தங்குமிடங்கள் கிடைக்கும். இவைகளுக்கு அதிக செலவு பிடிக்காது.

(h) பணக்காரர்களாயிருக்கும் இந்தியர்களுக்குச் சௌகரியமான இடங்களில் வீடுகள் கிடைக்கும். மற்றவர்கள் பட்டணத்தில் தங்குமிடங்களுக்காகவும் சாப்பாட்டுக்காகவும் ஏற்பாடு செய்துகொள்ளலாம். நாளொன்றுக்கு 12 அணு வாடகை செலுத்தக்கூடிய வியாதியஸ்தர்களுக்காக வைத்தியசாலை வளவில் நான்கு பகுதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. வைத்தியசாலை வளவில் வாடகையில்லாமல் விடப்படும் பகுதிகளிலே ஏழைகளாயுள்ள வியாதியஸ்தர்களுக்கு தங்க இடம் கொடுக்கப்படுகிறது. மேலும், அவர்களுக்குக் கம்பளிகளும் சமையல் செய்வதற்கான சட்டிகளும் கொடுக்கப்படும்.

(i) ப்ரிடிஷ் இராணுவ வீரர்களும் அவர்களுடைய குடும்பத்தாரும் வெல்லிங்டனிலிருக்கும் ஸானடோரியத்தில் (சுகாதார ஸ்தலத்தில்) தங்குகிறார்கள். அவர்களைப் பிரதி தினமும் ஒரு டாங்காவில் வைத்தியசாலைக்கு அனுப்புகிறார்கள்.

(j) இந்திய பட்டாளங்களைச்சேர்ந்த இராணுவ வீரர்களுக்கு, அவர்களுக்கென்று இராணுவ இலாகாதாரரால் வைத்தியசாலை வளவுக்குள் கட்டப்பட்டிருக்கும் பகுதிகளில் தங்க இடம் கொடுக்கப்படும்.

7. குன்னூருக்குப் போகக்கூடிய நிலைமையிலிராத சகல நபர்களும் ஏழைகளாயுள்ள சகல நபர்களும், கவர்ன்மென்டாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இதர சிகிச்சைச் சாலைகளில் தங்களுக்கு மிகவும சௌகரியமாயிருக்கும் எந்த சிகிச்சைச் சாலையிலாவது வெறிகொண்ட நாய் முதலிய பிராணிகளின் கடிக்காக சிகிச்சை செய்துகொள்ளலாம்; 3-வது விதியைப் பார்க்கவும். இந்த சிகிச்சைச் சாலைகளில், ஏழைகளாயிருக்கும் நபர்களுக்கும், அதாவது மாதமொன்றுக்கு 50 ரூபாய்க்கு மேற்படாத சம்பளம் அல்லது வரும்படியுள்ள நபர்களுக்கும், சகல கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்களுக்கும், மாதமொன்றுக்கு 100 ரூபாய்க்கு மேற்படாத சம்பளம் பெறும் கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்களின் குடும்பத்தாருக்கும் மாத்திரமே இலவசமாய் சிகிச்சை செய்யப்படுகிறது. மற்ற சகலருக்கும் சிகிச்சை முழுவதுக்கும் 10 ரூபாய் விதிக்கப்படும். மேலும், அவர்களுக்குச் சிகிச்சை செய்யும்பொருட்டு, அம்மைப்பால் தருவிப்பதற்காக குன்னூரிலுள்ள பாஸ்சர் இன்ஸ்டிட்யூட்டுக்குத் தந்தி ஏதேனும் அனுப்பினால் அதற்காகப் பிடிக்கும் செலவையும் அவர்கள் கொடுக்க வேண்டும். அவர்கள் ஆஸ்பத்திரியிலேயே தங்கியிருக்கும் வியாதியஸ்தர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டால், ஷை தொகைகளுடன்கூட, ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்வதற்கும் பத்தியத்துக்கும் சாதாரணமாய்ப் பிடிக்கும் செலவும் அவர்களிடமிருந்து வாங்கப்படும்.

குறிப்பு —இந்திய இராணுவத்தைச் சேர்ந்த வைத்திய ஊழிய வர்க்கங்கள் சம்பந்தமான ரெகுலேஷன்களின் 406-வது பாராவின்படி இலவசமாய் வைத்திய சகாயம் பெற அர்ஹர்களாயிருக்கும் இராணுவ உத்தியோகஸ்தர்களும் அவர்களுடைய குடும்பத்தாரும் - உத்தியோகஸ்தரல்லாதவர்களுக்குப் பிரயோகப்படக்கூடிய வீதங்களின்படி வசதியிடத்துக்காகவும் பத்தியத்துக்காகவும் செலுத்தவேண்டிய தொகையுடன்கூட வைத்தியத்துக்காகவும் சஸ்திரப்பிரயோகத்துக்காகவும் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்வதற்காகவும் பிடிக்கும் செலவையும் தங்களுடைய சொந்த பணத்திலிருந்து முதலில் செலுத்தவேண்டும். ஷை உத்தியோகஸ்தர்கள் மேலே கண்ட தொகைகளைத் தாங்களே முதலில் செலுத்தின பிறகு, மத்திய கவர்ன்மென்டைச் சேர்ந்த எந்த இலாகாவில் தாங்கள் ஊழியம் செய்துகொண்டிருக்கிறார்களோ அந்த இலாகாவிலிருந்து ஷை தொகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

8. வியாதியஸ்தர்கள் தங்களை வேலையில் அமர்த்திக்கொண்டிருக்கும் ஸர்க்காரைச் சேராத நபர்களாலாவது, சிநேகிதர்களாலாவது, இதர தனி நபர்களாலாவது சங்கங்களாலாவது அவர்களுடைய செலவிலாவது இந்த வைத்தியசாலைக்காகிலும் இதர சிகிச்சைச்சாலைக்காகிலும் அனுப்பப்பட்டால், அப்படிப்பட்டவர்கள் அந்த வியாதியஸ்தர்களுக்குத் திரும்பி வருவதற்கான பிரயாணச் செலவையும், பதினுன்கு நாள்வரையில் நடந்தேறும் சிகிச்சைமுறைக் காலத்தில் அவர்களுடைய சாப்பாட்டுக்காகக் கொடுப்பதற்குப் போதுமான பணத்தையுங்கூட கொடுத்தனுப்பவேண்டும். இஷ்டமிருந்தால், இந்தக் காரியங்களுக்காக வேண்டியிருக்கும் பணத்தை வைத்தியசாலையின் டைரெக்டருக்காவது சிகிச்சைச் சாலையின் விசாரணை வகிக்கும் மெடிகல் ஆபிஸருக்காவது அனு

ப்பலாம். தாழ்ந்த ஊழியக்காரர்கள் விஷயத்திலும் எழுதப்படிக்கத் தெரியாத அல்லது பொறுப்பற்ற இதர நபர்கள் விஷயத்திலும் இந்தப்படி செய்வதே மிகவும் உசிதமாயிருக்கும்.

II-ம் அனுபந்தம்.

கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களும் ஸர்க்கார் ஊழியத்திலிராத ஏழை நபர்களும் வெறிகொண்ட பிராணிகளால் கடிக்கப்பட்டால், அவர்கள் சிகிச்சைக்காகக் குன்னூரிலிருக்கும் பாஸ்சர் இன்ஸ்டிட்யூட்டுக்காவது, டிஸ்ட்ரிக்ட் ஹெட்க்வார்ட்டர் ஆஸ்பத்திரிகளுக்காவது சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரிக்காவது, தலைச்சேரி, கொச்சி, நாகபட்டணம், கொடைக்கானல் அல்லது பத்திராசலத்திலிருக்கும் கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரிகளுக்காவது போகக்கூடியவர்களாயிருப்பதற்காக அவர்களுக்கு சகாயம் செய்து கொடுப்பதற்கான விதிகள்.

I.—கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களுக்குச் செய்துகொடுக்கப்படும் சகாயங்கள்.

இந்த விதிகளில், ‘கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்’ என்பது - மாகாண வருமானத்திலிருந்தாவது கவர்ன்மெண்டாரால் பரிபாலிக்கப்பட்டு வரும் போர்ட் (ரேவு) அண்ட் மெரீன் நிதியிலிருந்தாவது சம்பளம் கொடுக்கப்பெறும் அங்காமியான அல்லது நிலையான யாதொரு கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தரென்று அர்த்தமாகும். மேலும், பப்ளிக் வொர்க்ஸ் இலாகாவைச் சேர்ந்த எந்த சிப்பந்தியின் சம்பளம் சம்பந்தப்பட்ட வேலைக்குப் பிடிக்கும் செலவோடு சேர்க்கப்படுகிறதோ அந்த சிப்பந்தியைச் சேர்ந்த யாதொரு மெம்பரென்பதும் அதில் அடங்கும். ஆனால், அன்னிய ஊழியத்திலாகிலும் மியுனிஸிபல் அல்லது லோகல் பண்ட் ஊழியத்திலாகிலும் அமர்ந்திருக்கும் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தரென்பது அதில் அடங்காது. மேலும், யாதொரு கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களின் ஏஜெண்டாகப் பிரவர்த்திக்கும் பிரதேச கவர்ன்மெண்டாரின் பரிபாலன மேல் விசாரணைக்கு உட்பட்டிருந்து அவருடைய சம்பளம் இந்தியா கவர்ன்மெண்டின் வருமானத்திலிருந்து கொடுக்கத்தக்கதாயிருக்கிறபட்சத்திலே அப்படிப்பட்ட கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர் என்பதுங்கூட அதில் அடங்கும்.

2. கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் வெறிகொண்ட நாய் முதலிய பிராணிகளால் கடிக்கப்பட்டால், அவர்கள் - அப்படிப்பட்ட கடிக்குச் சிகிச்சை செய்துகொள்வதற்காக குன்னூரிலிருக்கும் பாஸ்சர் இன்ஸ்டிட்யூட் அல்லது டிஸ்ட்ரிக்ட் ஹெட் க்வார்ட்டர் ஆஸ்பத்திரி, அல்லது சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரி, அல்லது தலைச்சேரியிலாவது கொச்சியிலாவது நாகபட்டணத்திலாவது கொடைக்கானலிலாவது பத்திராசலத்திலாவது இருக்கும் கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரிகள் ஆகிய இவைகளில் எது அதிசமீபத்திலிருக்கிறதோ அதற்குப் போகலாம். நீலகிரி ஜில்லாவில், குன்னூரிலிருக்கும் பாஸ்சர் இன்ஸ்டிட்யூட்டில் சாதாரணமாய் சிகிச்சை செய்யப்படுகிறது.

3. யாதொரு கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர் குன்னூரிலிருக்கும் பாஸ்சர் இன்ஸ்டிட்யூட்டுக்காவது வெறிகொண்ட நாய் முதலிய பிராணிகளின் கடிக்குச் சிகிச்சை செய்யும் அதிசமீபத்திலுள்ள வேறே யாதொரு சிகிச்சைச் சாலைக்காவது போவதற்கு வேண்டிய பணம் உடனே கிடைப்பது அவருக்குக் கஷ்டமாயிருந்து, அவருடைய சம்பளம் மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய்க்கு மேற்படாமலிருக்கிறபட்சத்திலே, அவருக்கு அடியிற்கண்டவைகளைக் கொடுக்கலாம்; அவையாவன:—

(i) வெறிகொண்ட நாய் முதலிய பிராணிகளின் கடிக்குச் சிகிச்சை செய்துகொள்வதற்காக அவர் போகும் இடத்துக்குப் போவதற்கும் அங்கிருந்து திரும்பி வருவதற்கும் வாஸ்தவத்தில் அவருக்குப் பிடிக்கும் பிரயாணச் செலவுக்கு, அதாவது, (a) ரெயில்வே மார்க்கமாக அவர் உத்தியோக அலுவலாய்ப் போகும்போது எந்த வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்ய அர்ஹராயிருக்கிறாரோ அந்த வகுப்பிலே போகவர ஒருவருக்காகச் செலுத்தவேண்டிய கட்டணத்துக்கும், (b) ரஸ்தா அல்லது நதிமார்க்கமாய்ச் செய்யும் பிரயாணங்களுக்கு, விதிகளின்படி கொடுக்கத்தக்க தொகைக்கு அதிகப்படாமல் வாஸ்தவத்தில் போகவரப் பிடிக்கும் செலவுக்கும் மேற்படாத முன்பணம். வியாதியஸ்தருக்குச் சிகிச்சை முடிந்த பிறகு, அவர் எந்த மருந்து குத்தும் சாலையில் சிகிச்சை செய்யப்பட்டாரோ அந்த சாலையின் விசாரணை வகிக்கும் மெடிகல் ஆபிஸரிடமிருந்து பெற்ற விடுதலை ஸெர்டிபிகேட்டை ஹாஜர்ப்படுத்துவதன்மேல், அந்த இடத்திலிருக்கும் ட்ரெஷரி ஆபிஸர் அவருக்குத் திரும்பிவரும் பிரயாணத்துக்காகப் பிடிக்கும் செலவுத் தொகையைக் கொடுக்கவேண்டும்;

(ii) முன்பணமாக ஒருமாதச் சம்பளம்;

(iii) ஒரு மாதத்துக்குக் காஷுவல் லீவ் என்னும் ரஜா; ஆனால், அப்படிப்பட்ட கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர் வேலைக்கு வராதிருப்பது காரணமாக அவருக்குப் பர்த்தியாய் ஒருவரை நியமிப்பது அவசியமாயிருந்தால், அப்படி வராமலிருக்கும் கால அளவில் ஒரு மாதம் வரையிலுள்ள காலத்தை கவர்ன்மெண்டாரின் உத்தரவின்படி, அவருடைய ரஜா கணக்கிலிருந்து கழிக்காமல் முழுச் சராசரி சம்பளத்துடன் கொடுக்கப்படும் அதிகப்படியான ரஜாவாகப் பாவிக்கலாமேயன்றி, காஷுவல் லீவ் என்னும் ரஜாவாகப் பாவிக்கலாகாது. அதற்கு மேலும் ரஜா ஏதாகிலும் வேண்டியிருந்தால், அது - அவருடைய ரஜா கணக்கிலிருந்து கழித்துக்கொள்ளக்கூடியதாய், சந்தர்ப்பத்துக்கேற்றபடி முழுச் சராசரி சம்பளத்துடனோ அரைச் சராசரி சம்பளத்துடனோ கொடுக்கும் ரஜாவாக இருக்கவேண்டும்.

குறிப்புகள்.—1. இந்த விதியில் வருகிற “மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய்க்கு மேற்படாமலிருக்கிற பட்சத்திலே” என்னும் வார்த்தைகளும், இந்த விதியிலும் இதற்குப் பிந்திய விதிகளிலும் வருகிற ‘சம்பளம்’ என்னும் வார்த்தையும் (Fundamental Rules) பண்ட

மென்டல் ரூல்ஸ் என்னும் விதிகளைச் சேர்ந்த 9(28) விதியில் அர்த்தம் சொல்லப்பட்டபடியுள்ள நிலையான சம்பளம் என்பதைக் குறிப்பதாக அவைகளுக்கு அர்த்தம் பண்ணவேண்டும்.

2. கீழ்த்தர ஊழியக்காரர்களுக்கு இந்த விதியில் உத்தேசிக்கப்பட்டுள்ள முழுச் சராசரி சம்பளத்துடன் ஒருமாத ரஜா கொடுப்பதானது - கவர்ன்மென்டுக்கு அதிகப்படியான செலவு ஒன்றும் இருக்கக்கூடாதென்னும் சாதாரண திட்டத்துக்கு உட்படாது.

3. பப்ளிக் வொர்க்ஸ் இலாகாவைச் சேர்ந்த எந்த சிப்பந்தியின் சம்பளம் சம்பந்தப்பட்ட வேலைக்குப் பிடிக்கும் செலவோடு சேர்க்கப்படுகிறதோ அந்த சிப்பந்தியைச் சேர்ந்த மெம்பர்களுக்கும் ஷை சகாயம் இப்போது செய்து கொடுக்கப்படுகிறபடியால், அப்படிப்பட்ட யாதொரு மெம்பருக்குக் கொடுக்கத்தக்க உச்ச ரஜாவானது - அவருக்குப் பார்த்தியாக எவரும் நியமிக்கப்படாதபட்சத்திலே, ஒரு மாதத்துக்கு மேற்படாமல் காஷுவல் லீவ் என்னும் ரஜாவும், அவருக்குப் பார்த்தியாக ஒருவர் நியமிக்கப்படுகிறபட்சத்திலே சம்பளமில்லாமல் கொடுக்கப்படும் ரஜாவுமாகும். ஒரு மாதத்துக்கு மேற்பட்டுக் கொடுக்கப்படும் எந்த ரஜாவையும் சம்பளமில்லாமல் கொடுக்கப்படும் ரஜாவாகப பாவிக்கவேண்டும்.

4. மாதம் ஒன்றுக்கு 50 ரூபாய்க்கு மேற்படாமல் சம்பளம் வாங்கும் கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்களின் விஷயத்தில், பிரயாண வர்த்தனையாக முன்பணமாய்க் கொடுத்த தொகைகளைத் திருப்பி வசூல் செய்யாமல் விட்டுவிடலாம். 50 ரூபாய்க்கு மேற்பட்டு 100 ரூபாய்க்கு மேற்படாமல் சம்பளம் வாங்குபவர்களின் விஷயத்தில், விசேஷ சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கும் பட்சத்தில், பிரயாண வர்த்தனையாக முன்பணமாய்க் கொடுத்த தொகைகளை முழுவதுமோ சிறிதுமட்டிலோ திருப்பி வசூலிக்காமல் விட்டுவிடுவது உசிதமென்று இலாகா தலைவர் அபிப்பிராயப்படும்பட்சத்தில் அந்தப்படியே வசூலிக்காமல் விட்டுவிடலாம்.

4. அன்றாட வீதங்கள் பெறுவதாக வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கும் அங்காமியான கம்பாஸிடர்கள் (அச்சு அடுக்குபவர்கள்), பகலில் வேலைசெய்து தாங்கள் செய்யும் வேலையின் அளவுக்குத் தக்கபடி கூலிபெறும் அதிகப்படியான கம்பாஸிடர்கள், பகலில் வேலை செய்யும் அதிகப்படியான ரீடர்கள், (Binders) பைண்டர்கள் முதலியவர்கள் இந்த சகாயங்களைப் பெறுவதற்கு அர்ஹர்களல்ல. ஆனால், நிலையான சிப்பந்தியைச் சேர்ந்தவராய் தாம் செய்யும் வேலையின் அளவுக்குத் தக்கபடி கூலி பெறும் யாதொரு கம்பாஸிடர் வெறிகொண்ட ஒரு பிராணியால் கடிக்கப்பட்டிருந்து, தம்முடைய சொந்த செலவிலே குன்னூரிலுள்ள பாஸ்சர் இன்ஸ்டிட்யூட்டுக்காவது வெறிகொண்ட நாய் முதலிய பிராணிகளின் கடிக்குச் சிகிச்சை செய்யும் அதி சமீபத்திலுள்ள சிகிச்சைச் சாலைக்காவது போகமுடியாத அளவுக்கு ஏழையாயிருந்தால், அவருக்கு சாதாரண கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கத்தக்க வீதங்களின்படி பிரயாண வர்த்தனையும், முந்தின ஆறுமாதத்தில் அவருக்குக் கிடைத்த வருமானங்களின் சராசரியைக் கொண்டு கணக்கிடப்பட்ட ஒருமாத வருமானத்தை முன்பணமாகவும் கொடுக்கலாம். ஆயினும், அவர் வேலைக்கு வராமலிருந்த காலத்துக்கு அவருக்குச் சம்பளம் அல்லது வர்த்தனை எதுவும் கொடுக்கப்படமாட்டாது. அச்சுக்கூட வேலையில் அமர்ந்திருக்கும் யாதொரு நபருக்கு தான் வாங்கின முன் பணம் முழுவதையும் திருப்பிச் செலுத்தக் கஷ்டமாயிருக்கிற விஷயம் ஏதாகிலும் நேர்ந்தால், ஸுபரின்டெண்டென்டானவர் - அவ்விஷயமாய் கவர்ன்மென்ட் பைனான்ஸ் ஸெக்ரெடரியின் விசேஷ உத்தரவு பெறுவதற்காக அதை அவருக்குத் தெரிவிக்கலாம்.

5. மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய்க்கு மேற்படாமல் சம்பளம் வாங்கும் யாதொரு கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தருடைய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரை வெறிகொண்ட பிராணி கடித்திருந்து, அப்படி கடிக்கப்பட்டவரைக் குன்னூரிலுள்ள பாஸ்சர் இன்ஸ்டிட்யூட்டுக்காவது அதிசமீபத்திலிருக்கும் சிகிச்சைச்சாலைக்காவது அனுப்புவதற்கு வேண்டிய பணம் உடனே கிடைப்பது அவருக்குக் கஷ்டமாயிருக்கிறபட்சத்திலே, அவருக்கு ஒரு மாத சம்பளத்துடன்கூட, 3 (i) விதியின்படி கொடுக்கத்தக்க வாஸ்தவமான பிரயாணச் செலவுக்கு மேற்படாமல் முன்பணம் கொடுக்கலாம். அவர் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய்க்கு மேற்பட்டு சம்பளம் வாங்காதபட்சத்தில், அவசியமானால், ஒரு துணையாளின் பிரயாணத்துக்கு வேண்டிய செலவை, வியாதியஸ்தரின் விஷயத்தில் எவ்வளவு கொடுக்கலாமோ அவ்வளவுக்கும் தொகையை வசூலிப்பது விஷயமாய் அவர் என்ன திட்டங்களுக்கு (கீழே பார்க்கவும்) உட்படுத்தப்படுகிறாரோ அதே திட்டங்களுக்கு உட்படுத்தியும் முன்பணமாகக் கொடுக்கலாம். 50 ரூபாய்க்கு மேற்படாமல் சம்பளம் வாங்கும் கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்களின் விஷயத்தில், அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் பிரயாணச் செலவுக்காகவும் துணையாளின் பிரயாணச் செலவுக்காகவும் முன்பணமாய்க் கொடுத்திருக்கும் தொகையைத் திருப்பி வசூல் செய்யாமல் விட்டுவிடலாம். 50 ரூபாய்க்கு மேற்பட்டு 100 ரூபாய்க்கு மேற்படாமல் சம்பளம் வாங்குபவர்கள் விஷயத்திலே, விசேஷ சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கும்பட்சத்தில், அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் பிரயாணச் செலவுக்காகவும் துணையாளின் பிரயாணச் செலவுக்காகவும் முன்பணமாய்க் கொடுத்திருக்கும் தொகையை, முழுவதுமோ சிறிதுமட்டிலோ வசூலிக்காமல் விட்டுவிடுவது தகுதியாயிருக்குமென்று இலாகா தலைவர் அபிப்பிராயப்படுகிறபட்சத்திலே அந்தப்படியே வசூலிக்காமல் விட்டுவிடலாம்.

6. மெடிகல் இலாகா, பப்ளிக் ஹெல்த் இலாகா, ஸிவில் வெடெரினரி இலாகா ஆகிய இந்த இலாகாக்களைச் சேர்ந்த சகல உத்தியோகஸ்தர்களும், எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாயிருந்தாலுஞ்சரி, வெறிகொண்ட நாய் முதலிய பிராணிகளின் கடிக்குச் சிகிச்சை செய்யும் அதி சமீபத்திலுள்ள சிகிச்சைச்சாலைக்குப்போய் அங்கிருந்து திரும்பிவருவதற்கும் ஷை சாலைகளில் ஏதாவதொன்றில் அவர்கள் தங்கியிருப்பதற்கும் பிடிக்கும் கால அளவுக்கான சம்பளம், பிரயாணவர்த்தனை, பென்ஷன் ஆகிய இவைகளின் காரியத்துக்காக அவர்கள் அலுவலின்மேலிருப்பதாகவே பாவிக்கப்படுவார்கள். ஆனால், அவர்களுக்கு வாஸ்தவத்தில் தங்களுடைய உத்தியோக அலுவல்களைச் செய்துகொண்டிருக்கும்போது வெறிகொண்ட அல்லது அந்தப்படியிருப்பதாக சந்தேகிக்கப்பட்ட பிராணிகளின் ஸ்பரிசம் ஏற்பட்டிருக்கவேண்டும்.

7. மாதமொன்றுக்கு 50 ரூபாய்க்கு மேற்பட்டுச் சம்பளம் வாங்கும் கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்கள சிகிச்சைக்காகப் பாஸ்சர் இன்ஸ்டிட்யூட்டுக்காகிலும் வேறே யாதொரு சிகிச்சை சாலைக்காகிலும் போனால், அவர்கள் - பிரயாணம் செய்யும காலத்திலும் ஷை இன்ஸ்டிட்யூட்டில் அல்லது மருந்து குத்தும் சாலையில் சிகிச்சை செய்துகொள்ளுகையிலும் தங்களுக்குப் பிடிக்கும் போஜன செலவைத் தாங்களே ஏற்றுக்கொள்ளவேண்டும். மாதமொன்றுக்கு 50 ரூபாய்க்கு மேற்படாமல் சம்பளம் வாங்கும் கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்கள் சிகிச்சை செய்துகொள்ளுகையிலும் ஷை இன்ஸ்டிட்யூட்டுக்காவது அதிசமீபத்திலிருக்கும் சிகிச்சைச்சாலைக்காவது பிரயாணஞ் செய்துகொணடிருககையிலும் அங்கிருந்து திரும்பிவந்துகொண்டிருக்கையிலும், சென்னை பிரயாணவாத்தனை விதிகளின் பிரகாரம் கொடுக்கத்தக்க அன்றாட வர்த்தனை விதப்படி போஜன வர்த்தனை பெற அர்ஹராவார்கள் வெறிகொண்ட நாய் முதலிய பிராணிகளின் கடிக்காக சிகிச்சை செய்துகொள்ளும் கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்குங்கூட இதேமாதிரி சகாயம் செய்துகொடுக்கலாம்.

குறிப்பு—மெடிகல் இலாகா, பப்ளிக் ஹெல்த் இலாகா, ஸிவில் வெடெரினரி இலாகா ஆகிய இந்த இலாகாக்களில் வேலையில் அமர்ந்திருந்து, கன்டின்ஜென்ட் செலவுத் தொகையிலிருந்து சம்பளம் கொடுக்கப்பெறும் தாழ்ந்த ஊழியக்காரர்கள் மேலே 6-வது, 7-வது விதிகளின்படி செய்துகொடுக்கத்தக்க சகாயங்களைப் பெற அர்ஹராவார்கள்.

8. II-A அனுபந்தத்திற்கண்ட சென்னை மாகாணத்தைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் தங்கள்கீழ் வேலையாயிருக்கிற அல்லது தங்களுடைய அதிகாரத்துக்குட்பட்ட கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்களுக்கு மேலே சொன்ன சகாயங்களைச் செய்துகொடுக்க அந்த உத்தியோகஸ்தர்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறது.

9. குன்னூரிலுள்ள இன்ஸ்டிட்யூட்டுக்காகிலும் வெறிகொண்ட நாய் முதலிய பிராணிகளின் கடிக்குச் சிகிச்சை செய்யும் அதிசமீபத்திலுள்ள சிகிச்சைச்சாலைக்காகிலும் ஒவ்வொரு கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தரையும் அனுப்பும் சங்கதியை - எவரால் அந்த வியாதியஸ்தர் அனுப்பப்படுகிறாரோ அந்த ஆபிஸருக்கு அடுத்து மேற்பட்டுள்ள ஆபிஸருக்கு உடனே தெரிவிக்கவேண்டும். அந்த ஆபிஸர் - தாம் இலாகா தலைவராய் இராதபட்சத்தில், இலாகா தலைவருக்கு அதை உடனே தெரிவிக்கவேண்டும். இலாகா தலைவரே ஷை நபரை அனுப்பும்பட்சத்தில், அதற்குமேல் யாதொருவருக்கும் தெரிவிக்கவேண்டியதில்லை. குன்னூரிலுள்ள பாஸ்சர் இன்ஸ்டிட்யூட்டின் டைரெக்டருக்கும் அல்லது மருந்து குத்தும் சாலையின் விசாரணைவகிக்கும் மெடிகல் ஆபிஸருக்குங்கூட II-D அனுபந்தத்திற்கண்ட நமூனாப்பிரகாரம நேராக உடனே ரிபோர்ட் செய்யவேண்டும்.

10. யாதொரு வியாதியஸ்தர் கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தராயிருந்து, தாம் இன்னாரென்று எண்பிப்பதற்குத் திருப்திகரமான ருஜுவிடுவதன்மேலும், திருப்பிச் செலுத்தப்படும் கடனாக இந்த விதிகளின்படி தாம் வாங்க அர்ஹராயிருக்கிற ஒரு மாத சம்பளத்தை முன்பணமாக தாம் பெற்றுக்கொள்ளவில்லையென்பதற்குப் போதுமான சாட்சியம் காட்டுவதன்மேலும் ஷை இன்ஸ்டிட்யூட்டின் டைரெக்டராவது மருந்துகுத்தும் சாலையின் விசாரணைவகிக்கும் மெடிகல் ஆபிஸராவது - அப்படிப்பட்ட கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தருக்கு ஒருமாத சம்பளத்துக்கு மேற்படாமல் முன்பணம் கொடுக்கலாம். மேலும், அப்படிக் கொடுத்த தொகையை மூன்றுக்குக் குறையாமலும் பன்னிரண்டுக்கு மேற்படாமலுமுள்ள மாதத்தவணைகளில் அவருடைய சம்பளத்திலிருந்து பிடித்துக்கொள்ளும்பொருட்டு ஷை கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர் எந்த இலாகாவைச் சேர்ந்தவரோ அந்த இலாகா தலைவருக்கு அப்படி முன்பணம் கொடுத்திருப்பதைப் பற்றி அவர் தெரிவிக்கவேண்டும். ஷை கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர் கொடுத்த ருஜுவை (வௌச்சர்) ஆதரவுச் சீட்டாக வைத்துக்கொண்டு, அந்த செலவுத் தொகையை டைரெக்டராவது மருந்துகுத்தும் சாலையின் விசாரணைவகிக்கும் மெடிகல் ஆபிஸராவது - ட்ரெழரி அல்லது ஸப் ட்ரெழரியின் விசாரணைவகிக்கும் உத்தியோகஸ்தரிடமிருந்து வசூல் செய்துகொள்வார். அந்த உத்தியோகஸ்தர் அவசியமானபொழுது ஷை ஆதரவுச் சீட்டை சம்பந்தப்பட்ட ஜில்லாவுக்கு அனுப்ப ஏற்பாடு செய்வார். யாதொரு கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர் ஷை இன்ஸ்டிட்யூட்டுக்காவது ஆஸ்பத்திரிக்காவது புறப்படுவதற்குமுன் ஏற்கனவே ஒருமாத சம்பளம் முன்பணமாகப் பெற்றிருந்தும் சிகிச்சையிலிருக்கும் காலத்தில் அவர் கையிலுள்ள பணம் செலவாய்ப்போயிருந்தால அவருக்கு, டைரெக்டராகிலும், சிகிச்சைச் சாலையின் விசாரணைவகிக்கும் மெடிகல் ஆபிஸராகிலும் ருஜுவிஷயமாகவும் தொகையைத் திருப்பி வசூலிப்பது விஷயமாகவும் மேலே கண்ட திட்டங்களுக்குட்பட்டு மிக விசேஷ சந்தர்ப்பங்களில் அரைமாதச் சம்பளத்துக்கு மேற்படாத ஒரு தொகையைப் பின்னும் முன்பணமாகக் கொடுக்கலாம். மேலும், அவர் - மாதம் ஒன்றுக்கு 50 ரூபாய்க்கு மேற்படாமல் சம்பளம் பெறும் கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்களின் போஜன செலவுக்காகவும் திரும்பி வரும் பிரயாணச் செலவுக்காகவும் பிடிக்கும் தொகையைக்கூட 3-வது விதியைச் சேர்ந்த (i) குறிப்பிட்ட உபவிதியின்படியும் 7-வது விதியின்படியும் அனுமதிக்கக்கூடிய அளவுக்கு முன்பணமாகக் கொடுக்கலாம். அன்றியும், யாதொரு கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர் இன்ஸ்டிட்யூட்டிலாவது ஆஸ்பத்திரியிலாவது சிகிச்சையிலிருந்துவரும் தம்முடைய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்காக மேலேகண்டபடி முன்பணம் வேண்டுமென்று கேட்டுக்கொள்ளும்பட்சத்தில், இன்னாரென்று எண்பிப்பதற்கும் திருப்பி வசூல் செய்வதற்கும் சம்பந்தமாய் மேலேகண்ட திட்டங்களுக்குட்பட்டு அவருக்கும் ஷை முன்பணம் கொடுக்கலாம்.

11. டைரெக்டர் அல்லது விசாரணை வகிக்கும் மெடிகல் ஆபிஸரால் கொடுக்கப்படும் விடுதலை ஸெர்டிபிகேட்டை இரட்டைப் பிரதியாகத்

தயார்செய்யவேண்டும். அதில் ஒருபிரதியை, பிரதமத்தில் கொடுத்த முன்பணத்துக்கு உத்தரவாதியான கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தருக்கு அவர் அனுப்பிவிடவேண்டும். மற்ற பிரதியை, திரும்பிவரும் பயணத்துக்கான பிரயாண வர்த்தனைக்காக ட்ரெழரியில் பணங் கொடுக்கப்பெறும்பொருட்டு தாக்கல் செய்யப்படும் பில்லுடன் சேர்க்கவேண்டும்.

12. திரும்பிவரும் பயணத்துக்கான பிரயாண வர்த்தனை பில்லானது - ஷெ இன்ஸ்டிட்யூட்டுக்காவது சிகிச்சைச்சாலைக்காவது போன பிரயாணத்துக்காக என்ன வீதங்களின்படி வர்த்தனை பெற அனுமதி கொடுக்கப்பட்டதோ அதே வீதங்களின்படி இருக்கவேண்டும். மேலும், பிரதமத்தில் கொடுத்த முன்பணத்துக்கு உத்தரவாதியாயிருக்கிற ஆபிஸரால் (இதுவிஷயமாய்ப்) பிரதமத்தில் தெரிவிக்கப்பட்ட சங்கதியை ஷெ பில்லுக்கு ஆதாரமாகக் காட்டவும்வேண்டும். ஷெ. இன்ஸ்டிட்யூட்டில் அல்லது ஆஸ்பத்திரியில் கழித்த நாட்களுக்கும் திரும்பிவரும் பிரயாண நாட்களுக்கும் பிடித்த போஜன செலவை டைரெக்டர் அல்லது சிகிச்சைச் சாலையின் விசாரணை வகிக்கும் மெடிகல் ஆபிஸருடைய கையெழுத்து போட்டுள்ள பிரத்தியேகமான பில்லுகளின்மேல் முன்பணமாகக் கொடுக்கலாம். டைரெக்டர் அல்லது ஷெ மெடிகல் ஆபீஸர் - வியாதியஸ்தர் இன்ன வகுப்பைச் சேர்ந்தவரென்பதையும், இத்தனை நாள் அவர் சிகிச்சையிலிருந்தாரென்பதையும் அல்லது பிரயாணஞ்செய்ய இத்தனை நாள் செல்லுமென்பதையும் கண்டு அந்த பில்லுகளின்மேல் உறுதிமொழி கூறவேண்டும்.

13. இந்தியா கவர்ன்மென்டின் வருமானத்திலிருந்தாவது மாகாண வருமானத்திலிருந்தாவது சம்பளம் கொடுக்கப்பெறும் கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்களின் பிரயாண வர்த்தனையையும் போஜன வர்த்தனையையும், பிரத்தியேகமாயுள்ள ஒரு விவரத் தலைப்பிலே, அதாவது, "47 (மிஸலேனியஸ்) பலவகைப்பட்டவை—வெறிகொண்ட நாய் முதலிய பிராணிகளின் கடிக்குச் சிகிச்சை செய்வதற்கான பலவகைப்பட்ட செலவுகள்" என்னும் தலைப்பிலே, செலவாக எழுதவேண்டும். கவர்ன்மென்டாரால் பரிபாலிக்கப்படும் போர்ட் (ரேவு) அண்ட் மெரீன் நிதியிலிருந்து சம்பளம் கொடுக்கப்பெறும் உத்தியோகஸ்தர்களின் பிரயாண வர்த்தனையையும் போஜன வர்த்தனையையும், அவர்களுக்கு எந்த நிதியிலிருந்து சம்பளம் கொடுக்கப்படுகிறதோ அந்த நிதிக்குச் செலவாக எழுதவேண்டும். யாதொரு கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர் என்ன பிரயாண வர்த்தனை பெறுவதற்கு அர்ஹராயிருந்தாரோ அதைவிட அதிகமான பிரயாண வர்த்தனை அவருக்கு அனுமதிக்கப்பட்டிருந்தது காரணமாக அவர் அதிகப்படியாய் பெற்றிருந்து அப்படிப் பெற்றிருப்பதை வசூலிக்கவேண்டியிருந்தால், அதை அகௌன்டன்ட் ஜெனரல் வசூல் செய்வார்.

குறிப்பு.—சகல கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்களின் விஷயத்திலும், வெறிகொண்ட நாய் முதலிய பிராணிகளின் கடிக்குச் சிகிச்சை செய்யும்போது குத்தும் பாலுக்காகவும் அப்படிப்பட்ட பாலைத் தருவிப்பதற்காக அனுப்பப்படும் தந்திகளுக்காகவும் பிடிக்கும் செலவு கவர்ன்மென்டாரால் ஏற்றுக்கொள்ளப்படும். மாதமொன்றுக்கு 100 ரூபாய்க்கு மேற்படாமல் சம்பளம் வாங்கும் கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கூட ஷெ சகாயத்தைப் பெற அர்ஹராவார்கள்.

14. 3-வது, 4-வது, 5-வது விதிகளின்படி கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்களுக்கு முன்பணமாகக் கொடுத்த சகல தொகைகளையும், மதராஸ் பைனான்ஷியல் அண்ட் அகௌன்ட் கோட், 1-ம் வால்யும், 289 (a) பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறபடி மூன்று சமமான மாதத் தவணைத் தொகைகளாகச் சாதாரணமாய் வசூல் செய்யவேண்டும். ஆனால், இந்த விதிகளை அமுலுக்குக் கொண்டுவருவதனால் கஷ்டம் உண்டாகுமென்று எண்ணப்படுகிற சில விசேஷ விஷயங்களில்; பிரதேச கவர்ன்மென்டாராவது, கௌரவம் பொருந்திய ஹைகோர்ட் ஜட்ஜுகளும் ரெவினியு போர்டாரும், இது விஷயமாய்ப் பிரத்தியேகமாக அதிகாரங்கொடுக்கப்பெற்று கீழே குறிப்பிட்டுள்ள ஆபிஸர்களுமாவது - யாதொரு முன்பணத் தொகையை மூன்று தவணைகளுக்கு மேற்பட்டும் பன்னிரண்டு தவணைகளுக்கு மேற்படாமலும் திருப்பிச் செலுத்துவதற்கு அனுமதி கொடுக்கலாம் :—

சென்னை கவர்ன்மென்டைச் சேர்ந்த ஸர்ஜன் ஜெனரல்.

சிறைச்சாலைகளின் இன்ஸ்பெக்டர் ஜெனரல்.
பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல்.
ரெஜிஸ்ட்ரேஷன் இன்ஸ்பெக்டர் ஜெனரல்.
ரைட் ரெவரெண்ட் மதராஸ் பிஷப் அவர்கள்.
ப்ரெஸிடென்ஸி போர்ட் (ரேவு) ஆபிஸர்.
டைரெக்டர் ஆவ் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் என்னும் வித்தியா விசாரணைத் தலைவர்.
பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மென்ட் சீவ் என்ஜினீர்.
பப்ளிக் ஹெல்த் டைரெக்டர்.
சீவ் கன்ஸர்வேடர் ஆவ் பாரஸ்ட்ஸ்.

II—ஸர்க்கார் ஊழியத்திலிராத ஏழை நபர்களுக்குச் செய்துகொடுக்கப்படும் சகாயம்.

15. ஏழை வியாதியஸ்தர்கள் வெறிகொண்ட நாய் முதலிய பிராணிகளால் கடிக்கப்பட்டால், அவர்கள் அப்படிப்பட்ட பிராணிகளின் கடிக்குச் சிகிச்சை செய்துகொள்வதற்காக குன்னூரிலுள்ள பாஸ்சர் இன்ஸ்டிட்யூட்டுக்காவது கவர்ன்மென்டாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சிகிச்சைச் சாலைகளில் எது அதிசமீபத்திலிருக்கிறதோ அதற்காவது போகவேண்டும். ப்ரிடிஷ் இந்தியாவில் நிலையாய் வசித்துக்கொண்டிருக்கிறவராய் ஸர்க்கார் ஊழியத்திலிராத எந்த ஏழை நபராகிலும் வெறிகொண்ட பிராணியால் கடிக்கப்பட்டிருந்து அவர் அப்படிப்பட்ட கடிக்குச் சிகிச்சை செய்வதற்காக ஏற்பட்டிருக்கும் அதிசமீபத்திலிருக்கிற சிகிச்சைச் சாலைக்குத் தம் சொந்த செலவில் போகச் சக்தியற்றவராயிருப்பதாக II-B அனுபந்தத்தில் குறிப்பிட்டிருக்கும் உத்தியோகஸ்தர்களில் எவராகிலும் அபிப்பிராயப்படும் பட்சத்தில், அவருக்கு அடியிற் கண்ட சகாயங்கள் செய்து கொடுக்கலாம்; அவையாவன, (a) ரெயில்வே மார்க்கமாய் மூன்றும் வகுப்பில் போகவும் அங்கிருந்து திரும்பிவரவும் ஒருவருக்கான பாஸ் அல்லது டிக்கெட் அல்லது கட்டணம்; (b) ரஸ்தா அல்லது நதி மார்க்கமாய்ச் செய்யும்

பிரயாணங்களுக்கு வாஸ்தவத்தில் பிடிக்கும் பிரயாணச் செலவு; (c) பின்வரும் வீதங்களின்படி போஜன வர்த்தனை :—

ஐரோப்பியர்களும், ஆங்கிலோ இந்தியர்களுமாயிருந்தால், பிரயாணஞ் செய்யும்போது எட்டணுவும், சிகிச்சையிலிருக்கும்போது பன்னிரண்டு அணுவும். இந்தியர்களாயிருந்தால், பிரயாணஞ் செய்யும்போது நாலணுவும், சிகிச்சையிலிருக்கும்போது ஆறணுவும்.

ஆனல், வருஷம் ஒன்றுக்கு 50 ரூபாய்க்கு மேற்பட்டு கிஸ்தி செலுத்துகிற அல்லது நிலமல்லாத வேறே யாதொரு வருவாய் மூலமாக மாதம் ஒன்றுக்கு 50 ரூபாய்க்கு மேற்பட்டு வரும்படி பெறுகிற யாதொரு நபரையாவது அந்த நபரின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரையாவது இந்த விதியின் காரியத்துக்காக ஏழை என்னும் வகுப்பில் சாதாரணமாய்ச் சேர்க்கக் கூடாது. மேலும், எவராவது (சிகிச்சைக்காகப் போகும்) சமயத்தில் தாமே செலவு செய்வதற்கு வேண்டிய பணமுள்ளவராயிருந்தாலும், தம்முடைய செலவுக்குவேண்டிய பணத்தை பந்துக்களிடமிருந்து அடையக்கூடியவராயிருந்தாலும், அப்படிப்பட்ட யாதொரு நபரையும் ஏழை என்னும் வகுப்பில் சேர்க்கக் கூடாது. இந்த விதியின் காரியத்துக்காக தாம் ஏழையென்று சொல்லிக்கொள்ளும் யாதொரு நபர் - கிராமப் பெரியதனக்காரரிடமிருந்தாவது தம்முடைய கிராமவாசிகளான கண்ணியமான இரண்டு நபர்களிடமிருந்தாவது அந்தப்படி கண்டுள்ள ஒரு ஸெர்டிபிகேட்டை ஹாஜர்ப்படுத்தவேண்டும்.

சென்னை மாகாணத்தில் இந்த சகாயம் செய்துகொடுக்க அதிகாரம் பெற்றிருக்கும் உத்தியோகஸ்தர்களின் ஜாபிதா ஒன்று II-B அனுபந்தத்தில் கண்டிருக்கிறது.

16. ரெயில்வே கம்பெனியார் அனுமதித்திருக்கும் ஷரத்துகளின்படி, அதிசமீபமாயுள்ளதும் மிகவும் குறைவாய் செலவு பிடிப்பதுமான மார்க்கமாய் வியாதியஸ்தர் இருக்கும் இடத்திலிருந்து குன்னூருக்காவது ஆஸ்பத்திரிக்காவது போக ஒரு மூன்ரும் வகுப்பு பாஸ் அல்லது டிக்கெட்டானது - அந்த வியாதியஸ்தரை அனுப்புகிற ஆபிஸரால் அவருக்குச் சவதரித்துக் கொடுக்கப்படும். குன்னூரிலிருக்கும் பாஸ்சர் இன்ஸ்டிட்யூட்டின் டைரெக்டராகிலும் சிகிச்சைச்சாலையின் விசாரணை வகிக்கும் மெடிகல் ஆபிஸராகிலும் சிகிச்சை முடிந்த பிறகு வியாதியஸ்தர் திரும்பிவரும் பிரயாணத்துக்காக அம்மாதிரியான ஏற்பாடுகளையே செய்யவேண்டும்.

17. இந்திய ரெயில்வே கான்பெரன்ஸ் அஸோஸியேஷன் என்னும் சங்கத்தைச் சேர்ந்தவைகளாய் கீழே குறிப்பிட்டுள்ள ரெயில்வேக்கள் - குன்னூரிலுள்ள பாஸ்சர் இன்ஸ்டிட்யூட்டுக்காவது வெறிகொண்ட நாய் முதலிய பிராணிகளின் கடிக்குச் சிகிச்சை செய்வதற்காக ஏற்பட்டிருக்கும் அதிசமீபத்திலுள்ள கவர்ன்மென்ட் சிகிச்சைச்சாலைக்காவது போகிற அல்லது அங்கிருந்து திரும்பி வருகிற ஏழை வியாதியஸ்தர்களுக்கும் அவர்களுடைய துணையாள்களுக்கும் அடியிற்கண்ட திட்டங்களின்படி சகாயங்கள் செய்துகொடுக்கின்றன :—

வங்காள-நாக்பூர் ரெயில்வே.
மதராஸ் தென் மஹாராஷ்ட்ர ரெயில்வே.
தென் இந்திய ரெயில்வே.

திட்டங்கள்.

(1) ஸர்க்கார் உத்தியோகத்திலிராதவர்களும் யாதொரு கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தரின் குடும்பத்தைச் சேராதவர்களுமான ஏழை நபர்களுக்கும் அப்படிப்பட்ட நபர் ஸ்திரீயாயிருந்தாலும், 16 வயதுக்குட்பட்ட சிறுவனுயிருந்தாலும், தள்ளாத வயது காரணமாகவோ வேறே காரணமாகவோ தனிமையாய்ப் பிரயாணஞ்செய்ய முடியாத நபராயிருந்தாலும், ஒரு துணையாளுக்கும் கட்டணமில்லாமல் இலவசமாக மூன்ரும் வகுப்பு டிக்கெட்டுகள் கொடுக்கப்படும்.

(2) குன்னூரிலுள்ள பாஸ்சர் இன்ஸ்டிட்யூட்டின் அல்லது ஆஸ்பத்திரியின் அதிகாரிகளால் கையெழுத்து போடப்பட்ட விடுதலை ஸெர்டிபிகேட் ஹாஜர்ப்படுத்தப்படுவதன் மேல், திரும்பிவரும் பிரயாணத்துக்காக டிக்கெட்டுகள் கொடுக்கப்படும்.

(3) ஒவ்வொரு வியாதியஸ்தரோடாவது ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாய் ஒரு தடவை ஒன்ருய்ப் போகும் பல வியாதியஸ்தர்களோடாவது, மேலேகண்டபடி ஒரே ஒரு துணையாளை அழைத்துக்கொண்டு போவதற்கு அனுமதி கொடுக்கப்படும்.

(4) டிக்கெட்டுகள் வேண்டுமென்று எழுதும் கடிதத்தில் II-B அனுபந்தத்தில் கண்ட அதிகாரிகளில் ஒருவர் கையெழுத்து போடவேண்டும்.

(5) (a) ஷை கடிதம் II-C அனுபந்தமாக அச்சிடப்பட்டிருக்கும் நமூனுப்படி இருக்கவேண்டும். மேலும், எந்த ஆபிஸிலிருந்து அந்தக் கடிதம் அனுப்பப்பட்டதோ அந்த ஆபிஸின் ஆபிஸ் முத்திரை அதன் மேல் போட்டிருக்கவேண்டும். குன்னூருக்காவது வெறிகொண்ட நாய் முதலிய பிராணிகளின் கடிக்குச் சிகிச்சை செய்யும் அதிசமீபத்திலுள்ள சிகிச்சைச் சாலைக்காவது போக இலவசமாய் மூன்ரும் வகுப்பு டிக்கெட்டுகள் அல்லது பாஸுகள் கொடுக்கும்படி விண்ணப்பம் செய்துகொள்ளப்படும்போது, அனுப்பும் உத்தியோகஸ்தர் அந்தக் கடிதத்தைப் பூர்த்திசெய்து அதை ஸ்டேஷன் மாஸ்டரிடத்தில் கொடுக்கவேண்டும்.

(b) (ஷை கடிதத்தில்) எழுதியதை அழித்துவிட்டிருந்தாலும் மாற்றியிருந்தாலும், அந்தக் கடிதம் அனுப்பும் உத்தியோகஸ்தர் அதற்குத் தம்முடைய இனிஷல் (பெயரின் முதற் குறிப்பெழுத்துக்கள்) போடவேண்டும்.

18. அவசியமானபோது, ரஸ்தா அல்லது நதி மார்க்கமான பிரயாணங்களுக்காக வாஸ்தவமாய்ப் பிடிக்கும் பயணச் செலவையும், வியாதியஸ்தர் ஷை இன்ஸ்டிட்யூட்டுக்காவது ஆஸ்பத்திரிக்காவது போகும் பிரயாண காலத்துக்கான

போஜன வர்த்தனையையும் ஷை வியாதியஸ்தருக்கு முன்பணமாகக் கொடுக்கலாம். அவர் - மாகாண வருமானத்தின் செலவிலாவது, லோகல் அல்லது மியுனிஸிபல் நிதியின் செலவிலாவது ஷை இன்ஸ்டிட்யூட் அல்லது வேறே யாதொரு சிகிச்சைச் சாலைக்கு அனுப்பப்பட்டிருக்கிறாரென்று கண்டு, தம்மை அனுப்புகிற உத்தியோகஸ்தரால் கையெழுத்து செய்யப்பட்ட ஒரு ஸெர்டிபிகேட்டைத் தம்முடன் எடுத்துக்கொண்டுபோய்க் காட்டவேண்டும். வியாதியஸ்தர் எந்த விஸ்தீர்ணத்தைச் சேர்ந்தவராயிருக்கிறாரோ அந்த விஸ்தீர்ணம் யாதொரு மியுனிஸிபல் பட்டணம் அல்லது லோகல் போர்டின் எல்லைகளுக்குள் இருக்கும்பட்சத்தில், சம்பந்தப்பட்ட மியுனிஸிபாலிடி அல்லது லோகல் போர்டின் பெயரை ஷை ஸெர்டிபிகேட்டில் கண்டெழுதவேண்டும்.

19. ஷை வியாதியஸ்தருக்குச் சிகிச்சை நடக்கும் காலத்திலும் திரும்பிவரும் பிரயாண காலத்துக்காகவும் கொடுக்கப்படும் போஜன வர்த்தனையும், அவசியமாயிருக்கும்பட்சத்திலே, திரும்பிவரும் பிரயாணத்தில் ரஸ்தா அல்லது நதி மார்க்கமான பிரயாணங்களுக்காகப் பிடிக்கும் பயணச் செலவுங்கூட - முதலில் குன்னூரிலுள்ள பாஸ்சர் இன்ஸ்டிட்யூட்டின் டைரெக்டர் அல்லது சிகிச்சைச்சாலையின் விசாரணை வகிக்கும் மெடிகல் ஆபிஸரால் கொடுக்கப்பட்டு, பிற்பாடு விடுதலை ஸெர்டிபிகேட் ஹாஜர் செய்யப்படுவதன்மேல் ட்ரெழரியிலிருந்து வசூல்செய்து கொள்ளப்படும்.

20. டைரெக்டராலாவது ஷை மெடிகல் ஆபிஸராலாவது கொடுக்கப்படும் விடுதலை ஸெர்டிபிகேட்டை இரட்டைப் பிரதியாகத் தயார்செய்யவேண்டும். ஒரு பிரதியை அவர் - பிரதமத்தில் கொடுத்த முன்பணத்துக்கு உத்தரவாதியான கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தருக்கு அனுப்பிவிடவேண்டும்; மற்றதை, திரும்பிவரும் பயணத்துக்கான பிரயாண வர்த்தனை பில்லைப் பணம் கொடுக்கப் பெறுவதற்காக ட்ரெழரியில் தாக்கல் செய்யும்போது அதனுடன் சேர்க்கவேண்டும்.

21. திரும்பிவரும் பயணத்துக்கான பிரயாண வர்த்தனை பில்லானது - ஷை இன்ஸ்டிட்யூட் அல்லது இதர சிகிச்சைச்சாலைக்குப் போன பிரயாணத்துக்காக என்ன வீதங்களின்படி வர்த்தனை பெற அனுமதி கொடுக்கப்பட்டதோ அதே வீதங்களின்படி இருக்கவேண்டும். மேலும், பிரதமத்தில் கொடுத்த முன்பணத்துக்கு உத்தரவாதியான உத்தியோகஸ்தரால் (இது விஷயமாய்த்) தெரிவிக்கப்பட்ட சங்கதியை ஷை பில்லுக்கு ஆதாரமாகக் காட்டவேண்டும்.

22. ஷை இன்ஸ்டிட்யூட்டில் அல்லது சிகிச்சைச்சாலையில் கழித்த நாட்களுக்கும் திரும்பிவரும் பிரயாண நாட்களுக்கும் பிடித்த போஜன செலவை, டைரெக்டருடைய அல்லது மெடிகல் ஆபிஸருடைய கையெழுத்து போட்டுள்ள பிரத்தியேகமான பில்லுகளின்மேல் முன்பணமாகக் கொடுக்கலாம். டைரெக்டர் அல்லது மெடிகல் ஆபிஸர்-அந்த வியாதியஸ்தர் இத்தனை நாள் சிகிச்சையிலிருந்தாரென்பதை அல்லது பிரயாணஞ்செய்ய இத்தனை நாள் செல்லுமென்பதைக் கண்டு அந்த பில்லுகளின் மேல் உறுதிமொழி கூறவேண்டும்.

குறிப்பு.—குன்னூரிலுள்ள பாஸ்சர் இன்ஸ்டிட்யூட்டைத் தவிர இதர சிகிச்சைச் சாலைகளில் எதிலாகிலும் தங்கி வைத்தியம் செய்துகொள்ளும் வியாதியஸ்தராய்ச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கும் யாதொரு ஏழை நபருக்குச் சிகிச்சை செய்துகொண்டிருக்கும்போது, அவருக்குப் பத்தியம் செய்வதற்காகப் பிடித்த செலவை மெடிகல் ஆபிஸர் கையெழுத்து போட்டு அனுப்பும் பில்லுகளிலிருந்து நீக்கிவிடவேண்டும்.

23. யாதொரு ஏழை நபர் - (a) ஸ்திரீயாகவாவது, (b) 16 வயதுக்குட்பட்ட சிறுவனாகவாவது, (c) தள்ளாத வயது காரணமாகவோ போதுமான வேறே காரணமாகவோ தனிமையாய்ப் பிரயாணஞ்செய்யமுடியாதவராயிருக்கிற புருஷராகவாவது இருந்தால், (அடியிற்கண்ட குறிப்பில் நிபந்தனை கண்டிருக்கிற விஷயங்களிலன்றி மற்றபடி) ஒரு துணையாளுக்கு மேற்படாமல் தம்முடன்கூட அழைத்துக்கொண்டுபோக அவருக்கு அனுமதி கொடுக்கலாம். அப்படிப்பட்ட துணையாளுக்கு ரெயில்வே சகாயம் செய்துகொடுக்கப்படாதபட்சத்தில், அந்த துணையாளுக்காகப் பிடிக்கும் செலவானது - வியாதியஸ்தர்கள் விஷயமான செலவு எந்த நிதியைச் சேர்ந்ததாக எழுதப்படுகிறதோ அதே நிதியைச் சேர்ந்த செலவாக எழுதப்படும். அப்படிப்பட்ட துணையாளுக்கு அல்லது துணையாள்களுக்கு வியாதியஸ்தர்களுக்காக ஜாரி செய்யப்பட்ட வீதப்படி பிரயாணச் செலவும், போஜன வர்த்தனையும், வியாதியஸ்தர் அந்தத் துணையாளின் அல்லது துணையாள்களின் அன்றாடச் செலவைக் கொடுக்கச் சக்தியற்றவரென்று (அவரை) அனுப்பும் உத்தியோகஸ்தர் தெரிந்து திருப்தியடையும் விஷயங்களிலே, நாளொன்றுக்கு நாலணாவுக்கு மேற்படாமல் கூலியும் கொடுக்கலாம். மாதமொன்றுக்கு 100 ரூபாய்க்கு மேற்படாமல் சம்பளம் வாங்கும் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களுக்குங்கூட இந்த சகாயம் செய்துகொடுக்கத்தக்கதாகும். மேலும், 5-வது விதியிற்கண்ட திட்டத்துக்குட்பட்டு, அப்படிப்பட்ட கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கும் ஷை சகாயம் செய்து கொடுக்கத்தக்கதாகும்.

குறிப்பு.—II-B அனுபந்தத்தில் குறிப்பிட்டுள்ள அதிகாரிகளில் ஒருவருடைய உத்தரவின்மேல், விசேஷ சந்தர்ப்பங்களில் ஒரு துணையாளுக்குமேல் அழைத்துக்கொண்டுபோவதற்கு அனுமதி கொடுக்கலாம்; உதாரணமாக, வியாதியஸ்தர் - தாயாராவது அவரை அழைத்துக்கொண்டுபோவதற்காக வேறொரு ஸ்திரீயாவது இராமல் பிரயாணம் செய்யமுடியாத ஒரு குழந்தையாயிருந்து அந்த தாயார் அல்லது ஸ்திரீக்கும் ஒரு துணையாள் வேண்டியிருந்தாலும் வியாதியஸ்தர் ஒரு ஸ்திரீயாயிருந்து அவர் ஒரு துணையாளுடன்கூட ஒரு அல்லது பல குழந்தைகளையும் தன்னுடன் அழைத்துப்போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டாலும் இந்தப்படி அனுமதி கொடுக்கலாம்.

24. குன்னூருக்காவது வெறிகொண்ட நாய் முதலிய பிராணிகளின் கடிக்குச் சிகிச்சை செய்வதற்காக ஏற்பட்டிருக்கும் வேறே யாதொரு சிகிச்சைச்சாலைக்காவது ஸர்க்கார் செலவில் ஒவ்வொரு ஏழை நபரையும் அனுப்பும்

சங்கதியை, II-D அனுபந்தத்தில் கண்ட நமூனுவில் டைரெக்டருக்காகிலும் சம்பந்தப்பட்ட மெடிகல் ஆபிஸருக்காகிலும் உடனே தெரிவிக்கவேண்டும். எந்த விஸ்தீர்ணத்திலிருந்து வியாதியஸ்தர் அனுப்பப்படுகிறாரோ அந்த விஸ்தீர்ணமானது யாதொரு மியுனிஸிபல் பட்டணம் அல்லது லோகல் போர்டின் எல்லைகளுக்குள்ளே இருந்தால், ஷெ சங்கதியைப் பற்றி சம்பந்தப்பட்ட மியுனிஸிபல் கௌன்ஸிலின் அக்கிராசனாதிபதி அல்லது லோகல் போர்டின் ப்ரெஸிடென்டுக்குங்கூட ஒரு ரிபோர்ட் அனுப்பவேண்டும். மேலும், ஒவ்வொரு விஷயத்திலும் அகௌன்டன்ட் ஜெனரலுக்கும் ஒரு ரிபோர்ட் உடனே அனுப்பவேண்டும்.

அந்த ரிபோர்ட்டிலே—

(a) முன்பணமாகக் கொடுத்த (ரெயில், ரஸ்தா அல்லது நதி மார்க்கமான) பிரயாண வர்த்தனைத் தொகையையும்,

(b) எத்தனை தினங்களுக்காகவும் என்ன வீதப்படியும் போஜன வர்த்தனை முன்பணமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவைகளையும்,

(c) மாகாண வருமானத்திலிருந்தாவது மியுனிஸிபல் அல்லது லோகல் பண்ட் என்னும் நிதியிலிருந்தாவது செலுத்தப்படவேண்டிய செலவுகளையும்

கண்டெழுதவேண்டும்.

வெறிகொண்ட நாய் முதலிய பிராணிகளின் கடிக்குச் சிகிச்சை செய்வதற்காக ஏற்பட்டிருக்கும் யாதொரு சிகிச்சைச் சாலைக்குத் தாங்களாகவே போகும் நபர்களின் விஷயத்தில், அந்த சிகிச்சைச் சாலையின் விசாரணை வகிக்கும் மெடிகல் ஆபிஸரானவர் - அவசியமாயிருக்கும் ரிபோர்ட்டுகளை அகௌன்டன்ட் ஜெனரலுக்கும் சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபைகளுக்கும் அனுப்பவேண்டும்.

25. ஏழை நபர்களுக்குச் சிகிச்சை பண்ணுவதற்காகப் பிடிக்கும் செலவை—

(a) அனுப்பப்பட்ட நபர் வெல்லிங்க்டன், பறங்கிமலை, பல்லாவரம், பூந்தமல்லி, பல்லாரி ஆகிய இந்த கன்டோன்மென்டுகளின் எல்லைகளுக்குள் வசிக்கிறவராயிருந்தால், கன்டோன்மென்ட் நிதியிலிருந்தும்,

(b) மற்ற சகல விஷயங்களிலும், மாகாண வருமானத்திலிருந்தும்

செலுத்தவேண்டிய செலவாக எழுதவேண்டும்

மாகாண வருமானத்தின்கீழ் வரும் செலவை, 47. (மிஸலேனியஸ்) பலவகைப்பட்டவை—வெறிகொண்ட நாய் முதலிய பிராணிகளின் கடிக்குச் சிகிச்சை செய்வதற்கான பலவகைப்பட்ட செலவுகள்—என்னும் பிரத்தியேகமாயுள்ள ஒரு விவரத்தலைப்பில் செலவாக எழுதவேண்டும்.

குறிப்பு.—இந்த விதியில் 'செலவு' என்னும் வார்த்தையில், வெறிகொண்ட நாய் முதலிய பிராணிகளின் கடிக்கு உபயோகிக்கும் அம்மைப்பாலின் விலையும், அந்தப் பாலுக்காக குன்னூரிலுள்ள பாஸ்சர் இன்ஸ்டிட்யூட்டுக்குத் தந்தி கொடுப்பதற்காகப் பிடிக்கும் செலவும் அடங்கும். ஆனால், அந்த வார்த்தையில், கவர்ன்மென்ட் ஆஸ்பத்திரிகளில் அங்கேயே தங்கி வைத்தியம் செய்துகொள்ளும் வியாதியஸ்தர்களாய்ச் சேர்த்துக்கொள்ளப்பட்ட நபர்களுக்கு சிகிச்சை செய்துகொண்டிருக்கும்போது பத்திய விஷயமாய் வாஸ்தவத்தில் பிடிக்கும் செலவு அடங்காது.

26. தங்களுடைய சொந்த செலவில் ஷெ இன்ஸ்டிட்யூட்டுக்கு அல்லது சிகிச்சைச் சாலைக்கு வந்தபோதிலும், தங்களுக்கு போஜன முதலியவைகளுக்காக ஏற்பாடு செய்துகொள்ளவோ தாங்கள் திரும்பிவரும் பிரயாணத்துக்காகப் பணம் கொடுக்கவோ சக்தியற்றவர்களாயிருக்கிற ஏழை வியாதியஸ்தர்களுக்கு டைரெக்டராவது சம்பந்தப்பட்ட மெடிகல் ஆபிஸராவது முன்பணம் கொடுக்கலாம். 15-வது விதியில் சொல்லியிருக்கிறபடி வியாதியஸ்தரால் ஹாஜர்ப்படுத்தப்படும் ஏழையென்று கண்டுள்ள ஸெர்டிபிகேட்டை ஆதாரமாகக்கொண்ட ஒரு பில்லை சிகிச்சை பூர்த்தியானவுடனே ஹாஜர்செய்து, முன்பணமாய்க் கொடுத்திருக்கும் தொகைகளைச் சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபைகளிடமிருந்து திருப்பி வசூல் பண்ணவேண்டும். ஒரே பிரதேச விஸ்தீர்ணத்திலிருந்து சென்ற பல ஏழை வியாதியஸ்தர்கள் ஒருமாதகாலத்தில் பூர்த்தியாய்ச் சிகிச்சை செய்துகொள்ளும்பட்சத்தில், இவர்களெல்லோருக்கும் ஒன்றாய்த் தயாரிக்கப்பட்ட பில் ஒன்றைச் சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபைக்கு அனுப்பலாம். ஏழையாகத் தோற்றும் யாதொரு வியாதியஸ்தர் தாம் ஏழையென்று கண்டுள்ள ஸெர்டிபிகேட் இல்லாமல் வந்துசேர்ந்தால், டைரெக்டராவது சிகிச்சைச் சாலையின் விசாரணை வகிக்கும் மெடிகல் ஆபிஸராவது - ஷெ ஸெர்டிபிகேட்டுக்காக காத்துக்கொண்டிராமல், அந்த வியாதியஸ்தரைச் சேர்த்துக்கொள்ளலாம். ஆனால், அவர் - உடனே ஷெ வியாதியஸ்தரின் பெயரையும் மேல்விலாசத்தையும் சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபையின் அக்கிராசனாதிபதிக்காகிலும் ப்ரெஸிடென்டுக்காகிலும் அனுப்பி, ஷெ வியாதியஸ்தர் ஏழையென்று கண்டுள்ள ஒரு ஸெர்டிபிகேட்டை அனுப்பும்படி அவரைக் கேட்டுக்கொள்ளவேண்டும். ஷெ அக்கிராசனாதிபதி அல்லது ப்ரெஸிடென்டானவர் அந்தக் கடிதங்களை மிகவும் அவசரமானவைகளாகப் பாவித்து, வியாதியஸ்தர் பூர்த்தியாய்ச் சிகிச்சை செய்துகொள்வதற்குமுன், அதாவது, ஷெ நபர் வியாதியஸ்தராய்ச் சேர்த்துக்கொள்ளப்பட்டதிலிருந்து 14 தினங்களுக்குள், சம்பந்தப்பட்ட மெடிகல் ஆபிஸருக்கு பதில் அனுப்பவேண்டும். ஷெ ப்ரெஸிடென்ட் அல்லது அக்கிராசனாதிபதியிடமிருந்து ஷெ ஸெர்டிபிகேட் வரப்பெற்றுக்கொள்வதன்மேல், மேலே நிர்ணயித்திருக்கிறபடி ஒரு பில்லை ஹாஜர்ப்படுத்தி, வியாதியஸ்தர்களுக்கு முன்பணமாகக் கொடுக்கப்பட்ட போஜன வர்த்தனையைச் சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபையினிடமிருந்து வசூல்பண்ணவேண்டும். அப்படியில்லாமல், ஷெ அக்கிராசனாதிபதி அல்லது ப்ரெஸிடென்டினிடமிருந்து ஸெர்டிபிகேட் எதுவும் வரப்பெற்றுக்கொள்ளப்படாவிட்டாலும், அக்கிராசனாதிபதி அல்லது ப்ரெஸிடென்ட் ஸெர்டிபிகேட் எதுவும் கொடுக்காவிட்டாலும், டைரெக்டராவது சம்பந்தப்பட்ட

மெடிகல் ஆபிஸராவது - சாத்தியப்பட்டால் வியாதியஸ்தரிடமிருந்து ஷை செலவுத் தொகைகளை வசூல்பண்ணவேண்டும். இக் தப்படி செய்யமுடியாதபட்சத்திலே, அவை களை வசூல்செய்வது சாத்தியமா என்பதைக் குறித்து அடியிற்கண்டவிதமாய் விசாரணை செய்யவேண்டும் :—

யாருக்கு முன்பணம் கொடுத்திருக்கி றதோ அந்த வியாதியஸ்தர்கள் எந்த ஜில்லாக் களைச் சேர்ந்தவர்களென்று சொல்லுகிறார் களோ அந்த ஜில்லாக்களின் விசாரணை வகிக் கும் உத்தியோகஸ்தர்களுக்கு டைரெக்டராவது சம்பந்தப்பட்ட மெடிகல் ஆபிஸராவது நேரே எழுதி, முன்பணமாகக் கொடுத்திருக்கும் தொகைகள் விஷயமாகவுள்ள தாவாக்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும்படி அவர் களைக் கேட்கவேண்டும். ஜில்லா உத்தியோ கஸ்தர்கள் - முன்பணம் பெற்றிருக்கும் நபர்கள் வாஸ்தவத்தில் தங்களுடைய ஜில்லாக்களைச் சேர்ந்தவர்களென்று தெரிந்து திருப்தியடைந்த வுடனே, இந்த தாவாக்களை எடுத்துக்கொண்டு, தாங்கள் அந்தப்படி செய்திருப்பதாக டைரெக் டர் அல்லது மெடிகல் ஆபிஸருக்குத் தெரிவிக்க வேண்டும். பிறகு, டைரெக்டர் அல்லது மெடிகல் ஆபிஸர் ஜில்லா உத்தியோகஸ்தரின் 'அங்கீகாரச்சீட்டை' வௌச்சராக ஹாஜர்ப் படுத்தி முன்பணமாகக் கொடுத்திருக்கும் தொகைகளை ட்ரெழரியிலிருந்து வசூல்செய்ய வேண்டும். பிற்பாடு, முன்பணமாகக் கொடுத் திருக்கும் தொகைகள் அவ்வவ்விடத்திய விதி களின்படி வசூல் செய்யப்படுகின்றனவோ அல்லது வசூல்செய்ய முடியாதவையென்று கணக்கிலிருந்து அடித்துவிடப்படுகின்றனவோ அதற்கேற்ற பிரகாரம் சரிக்கட்டப்படும்படி யாக ஷை தாவாக்களை அவைகள் சம்பந்தப்படு கிற மாகாணங்களுக்கு அனுப்பிவிடவேண்டும். யாதொரு ஜில்லா உத்தியோகஸ்தருக்கு அனுப் பப்பட்ட பிறகு வசூல்செய்ய முடியாததென்று தெரியவருகிற யாதொரு தொகையானது— "47. (மிஸலேனியஸ்) பலவகைப்பட்டவை— வெறிகொண்ட நாய் முதலிய பிராணிகளின் கடிக்குச் சிகிச்சை செய்வதற்கான பலவகைப் பட்ட செலவுகள்"—என்னும் தலைப்பின்கீழ் மாகாணச் செலவாக அதுசம்பந்தப்பட்ட மாகாணத்துக்குச் செலவாய் எழுதப்படும். இல்லாவிட்டால், அதாவது, எந்த ஜில்லா உத் தியோகஸ்தரும் அந்த தாவாவை எடுத்துக் கொள்ளாதபட்சத்திலே, அது சென்னை அகௌன்டன்ட் ஜெனரலவர்களுடைய புஸ்த கங்களில் அதே தலைப்பின்கீழ் கடைசியாய்ச் சரிக்கட்டப்படும்.

குறிப்பு.—முன்பணமாய்க் கொடுத்திருந்து திரும்பி வசூலிக்க முடியாதவைகளாயிருக்கும் தொகைகளை மாகாண வருமானத்திலிருந்து செலுத்தவேண்டிய செலவாக எழுத அனுமதி கொடுக்கவுங்கூட குன்னூ ரிலுள்ள பாஸ்சர் இன்ஸ்டிட்யூட்டின் டைரெக்டருக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறது. ஆனால், அவர் மேலேகண்டபடி அனுமதி கொடுத்திருப்பதற்குச் சம்பந்தப்பட்ட ரிடர்ன்களை மூன்றுமாதத்துக்கொரு முறை ஸர்ஜன் ஜெனரல் மூலமாகக் கவர்ன்மென்டா ருக்கு அனுப்பவேண்டும்.

27. சிகிச்சை செய்துகொள்வதற்காக பாஸ் சர் இன்ஸ்டிட்யூட்டிலிருந்து குன்னூர் மியுனி ஸிபல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படுகிற ஏழை வியாதியஸ்தர்களின் விஷயத்திலே, டைரெக்ட ரானவர் - அவர்களுடைய பத்திய சம்பந்த மாய்ப் பிடிக்கும் செலவையும், மரணம் நேரி டுகிற விஷயத்திலே, சந்தர்ப்பத்துக்கேற்றபடி அவர்களைப் புதைப்பதற்கோ அல்லது தகனம் செய்வதற்கோ பிடிக்கும் செலவையும் முத லில் செய்து, 24-வது, 25-வது, 26-வது விதி களில் கண்ட நடவடிக்கை முறைப்படி அந்த செலவுத் தொகையை வசூல்பண்ணலாம்.

II-A அனுபந்தம்.

(II-ம் அனுபந்தம் 8-வது விதியைப் பார்க்கவும்).

தங்கள் கீழ் வேலையாயிருக்கிற அல்லது தங் களுடைய அதிகாரத்துக்குட்பட்டிருக்கிற கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்கள் குன் னூரிலுள்ள பாஸ்சர் இன்ஸ்டிட்யூட்டுக்கா வது வெறிகொண்ட நாய் முதலிய பிராணி களின் கடிக்குச் சிகிச்சை செய்யும் வேறே யாதொரு சிகிச்சைச் சாலைக்காவது போவ தற்காக அவர்களுக்குச் சகாயம் செய்து கொடுக்க அதிகாரம் பெற்றிருக்கும் உத்தி யோகஸ்தர்களின் ஜாபிதா.

டெவெலப்மென்ட் டிபார்ட்மென்ட்.

சீவ் கன்ஸெர்வேடர் ஆவ் பாரஸ்ட்ஸ்.

பாரஸ்ட் டிபார்ட்மென்டை (காட்டிலாகா வை)ச் சேர்ந்த அதிகப்படியான அஸிஸ் டன்ட் கன்ஸெர்வேடர்களின் அந்தஸ்தும் அதற்கு மேற்பட்ட அந்தஸ்துமுள்ள உத் தியோகஸ்தர்கள்.

டைரக்டர் ஆவ் பிஷரீஸ்.

பிஷரீஸ் டிபார்ட்மென்டைச் சேர்ந்த கெ ஜெட்டெட் ஆபிஸர்கள் (கெஜெட்டில் பெயர் முதலியவை பிரசுரிக்கப்பெறும் உத்தியோகஸ்தர்கள்).

டைரக்டர் ஆவ் இண்டஸ்ட்ரீஸ்.

இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மென்டை (கைத் தொழில் இலாகாவை)ச் சேர்ந்த கெஜெட் டெட் ஆபிஸர்கள்.

டைரக்டர் ஆவ் அக்ரிகல்சர்.

அக்ரிகல்சரல் டிபார்ட்மென்டை (விவசாய இலாகாவை)ச் சேர்ந்த கெஜெட்டெட் ஆபிஸர்கள்.

டெப்யுடி டைரக்டர் ஆவ் அக்ரிகல்சர், சின் கோனா.

கூட்டுறவு சங்கங்களின் ரெஜிஸ்ட்ரார்.

கூட்டுறவு சங்கங்களின் டெப்யுடி ரெஜிஸ்ட் ரார்கள்.

மெட்ராஸ் வெடெரினரி காலேஜ் ப்ரின்ஸி பால்.

டைரெக்டர் ஆவ் வெடெரினரி ஸெர்விஸஸ், சென்னை.

ஸிவில் வெடெரினரி டிபார்ட்மென்டைச் சேர்ந்த கெஜெட்டெட் ஆபிஸர்கள்.

எக்லிஸியாஸ்டிகல் டிபார்ட்மென்ட்.

ரைட் ரெவரெண்ட் மதராஸ் லார்ட் பிஷப் அவர்கள்.

வெனரபில் ஆர்ச்டீகன் அவர்கள்.

ஸ்காட்லண்ட் சர்ச்சைச் சேர்ந்த ப்ரெஸிடென்ஸி ஸீனியர் சாப்ளன்.

டயோஸீஸ் ரெஜிஸ்ட்ரார்.

சாப்ளன்களிருக்கும் பிரதான ஸ்தலங்களின் விசாரணை வகிக்கும் சகல சாப்ளன்களும், சாப்ளன்களுக்குப் பதிலாக வேலைபார்க்கும்படி நியமிக்கப்படுகிற க்ளெர்ஜிமன்களும்.

பைனான்ஸ் டிபார்ட்மெண்ட்.

ஸ்டேஷனெரி ஸூபரின்டெண்டெண்ட்.

கவர்ன்மெண்ட் அச்சுக்கூட ஸூபரின்டெண்டெண்ட்.

ப்ரெஸிடென்ஸி போர்ட் (ரேவு) ஆபிஸர்.

சென்னபட்டணம் போர்ட் ட்ரஸ்ட் சேர்மன்.

தூத்துக்குடி போர்ட் ட்ரஸ்ட் சேர்மன்.

கவர்ன்மெண்ட் ஹார்பர் என்ஜினீர்-இன்-சீவ்.

சென்னபட்டணம் ரேவின் டெப்யுடி கன்ஸர்வேடர்.

ரேவு ஆபிஸர்களும், ரேவு கன்ஸர்வேடர்களும்.

கவர்ன்மெண்ட் கன்ஸைன்மென்டுகளுக்கான (ஒப்படைகளுக்கான) ஏஜெண்ட்.

லோகல் பண்ட் அகௌண்ட்ஸ் எக்ஸாமினர்.

சென்னை ரெகார்ட் ஆபிஸ் க்யூரேடர்.

ஜுடிஷல் டிபார்ட்மெண்ட்.

பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல்.

பொலீஸ் டெப்யுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல்கள்.

பொலீஸ் கம்மிஷனர்.

(சென்னை பொலீஸ் டெப்யுடி கம்மிஷனர்கள் உள்பட) பொலீஸ் டிஸ்ட்ரிக்ட் ஸூபரின்டெண்டென்டுகள்.

பொலீஸ் அஸிஸ்டன்ட் ஸூபரின்டெண்டென்டுகள்.

பொலீஸ் டெப்யுடி ஸூபரின்டெண்டென்டுகள்.

லா டிபார்ட்மெண்ட்.

ரெஜிட்ரேஷன் இன்ஸ்பெக்டர் ஜெனரல்.

டிஸ்ட்ரிக்ட் ரெஸ்ஜிட்ரார்கள்.

ஸப்-ரெஜிஸ்ட்ரார்கள்.

ஜனனமரண விவாகங்கள் சம்பந்தமான ரெஜிஸ்ட்ரார் ஜெனரல்.

கவர்ன்மெண்ட் ஸீனியர் ட்ரான்ஸ்லேடர்.

சட்டநிரூபண சபை ஸெக்ரெடரி.

சிறைச்சாலைகளின் இன்ஸ்பெக்டர் ஜெனரல்.

எல்லா சிறைச்சாலைகளின் ஸூபரின்டெண்டென்டுகள்.

ஜாய்ன்ட் ஸ்டாக் கம்பெனிகளின் ரெஜிஸ்ட்ரார்.

கௌரவம் பொருந்திய ஹைகோர்ட் ஜட்ஜுகள்.

ஸ்மால்காஸ் கோர்ட் சீவ் ஜட்ஜ்.

சென்னை ஸ்மால்காஸ் கோர்ட் ஜட்ஜுகள்.

டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜுகள்.

ஸப்-ஜட்ஜுகள்.

டிஸ்ட்ரிக்ட் முன்ஸிபுகள்.

சென்னை அட்மினிஸ்ட்ரேடர் ஜெனரலும் அபிஷியல் ட்ரஸ்டியும்.

சென்னை கவர்ன்மெண்ட் ஸொலிஸிடர்.

சென்னை பப்ளிக் ப்ராஸிக்யூடர்.

சென்னை கவர்ன்மெண்ட் ப்ளீடர்.

சென்னை ஷெரிப்.

க்ரௌன் ப்ராஸிக்யூடர்.

டைரெக்டர் ஆவ் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன்.

பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் டெப்யுடி டைரெக்டர்களும், பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் ஸ்திரீ டெப்யுடி டைரெக்டரும்.

கவர்ன்மெண்ட் பரீட்சைகளுக்கான கம்மிஷனர்.

கவர்ன்மெண்ட் மியூஸியம் ஸூபரின்டெண்டென்டும், கன்னிமரா லைப்ரெரியின் பிரதான லைப்ரேரியனும்.

டிஸ்ட்ரிக்ட் எடுகேஷனல் ஆபிஸர்கள்.

பெண்பிள்ளைக் கல்விச்சாலைகளின் ஸ்திரீ இன்ஸ்பெக்டர்கள்.

கவர்ன்மெண்ட் காலேஜுகளின் ப்ரின்ஸிபாலகன் (தலைவர்கள்)

ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டுகள்.

லோகல் ஸெல்ப்-கவர்ன்மெண்ட் டிபார்ட்மெண்ட்.

ஸர்ஜன் ஜெனரல்.

பப்ளிக் ஹெல்த் டைரெக்டர்.

பப்ளிக் ஹெல்த் அஸிஸ்டன்ட் டைரெக்டர்கள்.

கிண்டியிலுள்ள 'கிங் இன்ஸ்டிட்யூட் ஆவ் ப்ரிவென்டிவ் மெடிஸின்' என்னும் சாலையின் டைரெக்டர்.

கவர்ன்மெண்ட் கெமிகல் எக்ஸாமினர்.

கம்மிஷன்பெற்ற மெடிகல் ஆபிஸர்கள்.

ஸிவில் ஸர்ஜன்கள்.

மிலிடரி அஸிஸ்டன்ட் ஸர்ஜன்கள்.

ஆஸ்பத்திரிகள் அல்லது டிஸ்பென்ஸரிகளின் சுயேச்சையான விசாரணை வகிக்கும் ஸிவில் அஸிஸ்டன்ட் ஸர்ஜன்களும் ஸப்-அஸிஸ்டன்ட் ஸர்ஜன்களும்.

டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபிஸர்கள்.

பஞ்சாயத்துக்களின் ரெஜிஸ்ட்ரார் ஜெனரல்.

டௌன்-ப்ளானிங் டைரெக்டர்.

பொலிடிகல் டிபார்ட்மெண்ட்.

சிறப்புற்றோங்கும் கவர்னரவர்களின் மிலிடரி ஸெக்ரெடரி.

சிறப்புற்றோங்கும் கவர்னரவர்களின் ப்ரைவேட் ஸெக்ரெடரி.

பப்ளிக் டிபார்ட்மெண்ட்.

கவர்ன்மெண்ட் ஸெக்ரெடரிகளும், டெப்யுடி ஸெக்ரெடரிகளும், அண்டர் ஸெக்ரெடரிகளும்.

போர்ட் ஆவ் எக்ஸாமினர்ஸ் என்னும் பரீட்சா சங்கத்தின் ப்ரெஸிடென்ட்.

பப்ளிக் வொர்க்ஸ்-லேபர் டிபார்ட்மெண்ட்.

காவேரி-மேட்டூர் ப்ராஜெக்ட் என்ஜினீர்-இன்-சீவ்.

சீவ் என்ஜினீர், ஜெனரல், பில்டிங்ஸ், ரோட்ஸ்.

இரிகேஷன் சீவ் என்ஜினீர்.

ஹைட்ரோ-எலெக்ட்ரிக் டெவெலப்மென்ட் சீவ் என்ஜினீர்.
ஸூபரின்டென்டிங் என்ஜினீர்கள்.
எக்ஸிக்யுடிவ் என்ஜினீர்கள்.
சகல ஸப்டிவிஷன் ஆபிஸர்களும், சகல ஆபிஸ் தலைமை உத்தியோகஸ்தர்களும் (தங்களுக்கு அடுத்தாற்போல் கீழ்ப்பட்டுள்ள நபர்களுக்காக).
ஸானிடரி என்ஜினீர்.
டெப்யுடி ஸானிடரி என்ஜினீர்களும், அஸிஸ்டன்ட் ஸானிடரி என்ஜினீர்களும்.
எலெக்ட்ரிகல் என்ஜினீரும், அஸிஸ்டன்ட் எலெக்ட்ரிகல் என்ஜினீரும்.
கவர்ன்மென்ட் எலெக்ட்ரிகல் இன்ஸ்பெக்டரும், கவர்ன்மென்ட் ஜூனியர் எலெக்ட்ரிகல் இன்ஸ்பெக்டரும்.
லேபர் கம்மிஷனர்.
ப்ரொடெக்டர் ஆவ் எமிக்ரன்ட்ஸ் என்னும் குடியேறுகிறவர்களின் சம்ரட்சகர்கள்.

ரெவினியு டிபார்ட்மென்ட்.

போர்ட் ஆவ் ரெவினியு (லாண்ட் ரெவினியு-ஸெட்டில்மென்ட்).
கலெக்டர்கள்.
டிவிஷன் ஆபிஸர்கள்.
(லாண்ட் ரெகார்ட் தாசில்தார்களுட்பட) தாசில்தார்கள்.
எக்ஸைஸ் டிபார்ட்மென்டைச் சேர்ந்த கெஜெட்டெட் ஆபிஸர்கள்.
சுயேச்சையான விசாரணை வகிக்கும் டெப்யுடி தாசில்தார்கள்.
ஸர்வே டிபார்ட்மென்டில் அஸிஸ்டன்ட் டைரெக்டர் அந்தஸ்தும் அதற்கு மேற்பட்ட அந்தஸ்துமுள்ள உத்தியோகஸ்தர்களும், ஸர்வே ஸப்-அஸிஸ்டன்டுகளும்.
ஸெட்டில்மென்ட் பார்ட்டிகளின் விசாரணை வகிக்கும் உத்தியோகஸ்தர்களும், ஸெட்டில்மென்ட் டிபார்ட்மென்டிலுள்ள ஸூபர்வைஸர்களும் அங்காமியான ஸூபர்வைஸர்களும்.
சென்னையிலுள்ள ஸர்க்கார் ஆபிஸ்களின் தலைமை உத்தியோகஸ்தர்கள்.

II-B அனுபந்தம்.

(II-ம் அனுபந்தம் 15-வது, 17-வது விதிகளைப் பார்க்கவும்.)

ஸர்க்கார் உத்தியோகத்திலிராத ஏழை நபர்கள் குன்னூரிலுள்ள பாஸ்சர் இன்ஸ்டிட்யூட்டுக்காவது, வெறிகொண்ட நாய் முதலிய பிராணிகளின் கடிக்கு சிகிச்சைசெய்யும் அதி சமீபத்திலுள்ள வேறே யாதொரு சிகிச்சைச் சாலைக்காவது போவதற்காக அவர்களுக்குச் சகாயம் செய்துகொடுக்க அதிகாரம் பெற்றிருக்கும் உத்தியோகஸ்தர்களின் ஜாபிதா.

(1) கம்மிஷன்பெற்ற மெடிகல் ஆபிஸர்கள்.
(2) ஸிவில் ஸர்ஜன்கள்.
(3) மிலிடரி அஸிஸ்டன்ட் ஸர்ஜன்கள்.
(4) ஆஸ்பத்திரிகளின் சுயேச்சையான விசாரணை வகிக்கும் ஸிவில் அஸிஸ்டன்ட் ஸர்ஜன்களும், ஸப்-அஸிஸ்டன்ட் ஸர்ஜன்களும்.
(5) டிஸ்ட்ரிக்ட், மியுனிஸிபல் ஹெல்த் ஆபிஸர்கள்.
(6) கலெக்டர்கள்.
(7) டிவிஷன் ஆபிஸர்கள்.
(8) தாசில்தார்கள்.
(9) சுயேச்சையான விசாரணை வகிக்கும் டெப்யுடி தாசில்தார்கள்.
(10) டெப்யுடி ஸூபரின்டென்டின் அந்தஸ்தும் அதற்கு மேற்பட்ட அந்தஸ்துமுள்ள பொலீஸ் இலாகா உத்தியோகஸ்தர்கள்.
(11). ஸப் - ரெஜிஸ்ட்ரார்கள்.

[(5)–(11):] பிரஸ்தாப இடத்தில் மெடிகல் ஆபிஸர் எவரும் இராதபோது மாத்திரமே இந்த உத்தியோகஸ்தர்கள் தங்களுடைய அதிகாரங்களைச் செலுத்துவார்கள்.

யாதொரு கெஜெட்டெட் ஆபிஸர் இராவிட்டால், அவ்விடத்திலுள்ள ஸிவில் அதிகாரிகளுக்குள் மிகவும் உயர்ந்த அந்தஸ்திலுள்ளவர் டிக்கெட்டுகளுக்காக கடிதம் அனுப்ப அதிகாரம் பெற்றிருக்கிறார்.

II-C அனுபந்தம்.

(II-ம் அனுபந்தம் 17-வது விதியைப் பார்க்கவும்.)

குன்னூர் பாஸ்சர் இன்ஸ்டிட்யூட்டுக்காவது டிஸ்ட்ரிக்ட் ஹெட்க்வார்டர் ஆஸ்பத்திரிகளுக்காவது சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரிக்காவது தலைச்சேரி, கொச்சி, நாகபட்டணம், கொடைக்கானல், அல்லது பத்திராசலத்திலுள்ள கவர்ன்மென்ட் ஆஸ்பத்திரிகளுக்காவது போகிற அல்லது அங்கிருந்து திரும்பி வருகிற ஏழை நபர்களுக்காக டிக்கெட்டுகள் வேண்டுமென எழுதும் கடிதம்.

அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு உத்தியோகஸ்தரால் கையெழுத்து செய்யப்பட வேண்டும்--II-B அனுபந்தத்தைப் பார்க்கவும்.

(அனுப்பும் ஆபிஸ் முத்திரை.)

நெ.

இடம் 19 -ம்வூ மீ உ.

__________ரெயில்வேயைச் சேர்ந்த

__________(ஸ்டேஷனிலுள்ள)

ஸ்டேஷன் மாஸ்டருக்கு.

__________(வியாதியஸ்தரின் பெயர்) வெறிகொண்ட நாய் முதலிய பிராணிகளின் கடிக்குச் சிகிச்சைசெய்து கொள்வதற்காக / கொண்டபிறகு __________க்குப் போகிறபடியால், அவருக்கும் * அவருடைய துணையாளாகிய__________க்கும்__________ இருந்து__________க்கு ஒருதரம் பிரயாணஞ்செய்வதற்கான மூன்றும் வகுப்பு டிக்கெட்டு கட்டணமில்லாமல் தயவுசெய்து கொடுக்க

வும். அவர் ஸர்க்கார் உத்தியோகத்திலுமில்லை ; யாதொரு கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தரின் குடும்பத்தைச் சேர்ந்தவருமல்ல ; ரெயில்வே கட்டணத்தைச் செலுத்தும்படியான சக்தியும் அவருக்கு இல்லை. * இந்த வியாதியஸ்தர் துணையாளில்லாமல் பிரயாணஞ்செய்ய முடியாதவராயிருக்கிறாரென்று நான் தெரிந்து திருப்தியடைந்தேன்.

(கையெழுத்து)

(முழு உத்தியோகப்பெயர்)

குறிப்பு.—கடிதம் அனுப்புவதற்கு அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கும் உத்தியோகஸ்தர்களின் ஜாபிதாவுக்காக, பின்புறத்தைப் பார்க்கவும்.†

கடிதம் அனுப்பும் உத்தியோகஸ்தர்கள் - இது விஷயமாய் எழுதிக்கேட்பதற்குச் சௌகரியமாயிருக்கும்படியாக தங்களுடைய உத்தியோகப்பெயரைப் பூர்த்தியாய் எழுதவேண்டும்.

இந்தக் கடிதத்தை இரட்டைப் பிரதியாகத் தயாரித்து இரண்டாம் பிரதியை ரெகார்டுக்காக நிறுத்தி வைத்துக்கொள்ளவேண்டும்.

(ஸ்டேஷன் சிப்பந்தி எழுதவேண்டியது.)

இந்தக் கடித சம்பந்தமாய்

நெ. (கள்) உள்ள மூன்றாம் வகுப்பு டிக்கெட்டு (கள்) கொடுக்கப் பட்டிருக்கிறது / பட்டிருக்கின்றன.

ஸ்டேஷன்

தேதி

புக்கிங் க்ளர்க்.

II-D அனுபந்தம்.

(II-ம் அனுபந்தம் 9-வது, 24-வது விதிகளைப் பார்க்கவும்.)

வெறிகொண்ட நாய் முதலிய பிராணிகளின் கடிக்குச் சிகிச்சை செய்துகொள்வதற்காக வியாதியஸ்தர்களை அனுப்பும் சங்கதியைத் தெரிவிப்பதற்கான நமூனா.

(1) வியாதியஸ்தரின் பெயர்.

(2) வயதும் ஆண் அல்லது பெண் என்பதும்.

(3) தொழில் அல்லது ஸர்க்கார் உத்தியோகஸ்தராயிருந்தால் உத்தியோகப் பெயர்.

(4) பூர்த்தியான மேல்விலாசம்.

(5) தகப்பனார் பெயர்.

(6) ஏழையா அல்லவா என்பது.

(7) வியாதியஸ்தர் ஏழையாயிருந்து கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தராயிராவிட்டால், அவர் இன்ன மியுனிஸிபல் பட்டணம் அல்லது லோகல் போர்ட் விஸ்தீர்ணத்தைச் சேர்ந்தவரென்பது.

(8) துணையாள் அல்லது துணையாள்கள் எவரேனும் இருந்தால் அவர்களுடைய பெயர்.

(9) செலவானது ப்ரொவின்ஷியல் நிதியிலிருந்தா, லோகல்பண்ட் என்னும் நிதியிலிருந்தா, மியுனிஸிபல் நிதியிலிருந்தா செலுத்தப்படவேண்டுமென்பது.

(10) வியாதியஸ்தருக்கும் துணையாள் அல்லது துணையாள்கள் எவரேனும் இருந்தால் அவர்களுக்கும் முன்பணமாகக் கொடுத்திருக்கும் தொகையைப் பற்றிய விவரங்கள்—

(a) முன்பணமாக ஒரு மாதச் சம்பளம்.

(b) எந்த ரெயில்வே ஸ்டேஷனில் ரெயில் ஏறுகிறார்களோ அந்த ஸ்டேஷனுக்கு ரஸ்தா மார்க்கமாய்ப் போவதற்கான வர்த்தனை.

(c) இருந்து க்கு ரெயில் மார்க்கமாய்
இருந்து கருக் கட்டணமில்லாமல் -வது பகுப்பில் பிரயாணஞ் செய்வதற்கான ரெயில்வே கட்டணம் (டிக்கெட்டுகள்) மூன்றாம் வகுப்பு டிக்கெட்டுகள்.

(d) இருந்து க்கு தலைக்கு ரூ. வீதம் வகுப்பு ஸ்டீமர் அல்லது படகு கட்டணம்.

(e) நாளொன்றுக்கு வீதம் தினங்களுக்கு பிரயாணஞ் செய்கையில் பத்தியத்துக்காக செலவு.

(11) அதே பிராணியால் கடிக்கப்பட்ட இதர நபர்களின் பெயரும் மேல்விலாசமும்.

இடம்———————

தேதி———————

(அனுப்பும் உத்தியோகஸ்தரின் கையெழுத்து.)
உத்தியோகப் பெயர்.

அடியிற்கண்டவர்களுக்கு இதற்கு நகல் அனுப்பவேண்டும் :—

(i) மருந்து குத்தும் சாலையின் விசாரணை வகிக்கும் மெடிகல் ஆபிஸர், அல்லது குன்னூரிலுள்ள பாஸ்சர் இன்ஸ்டிட்யூட்டின் டைரெக்டர் (இரட்டைப் பிரதியாக) ;

(ii) சென்னை அகௌன்டன்ட் ஜெனரல் ;

(iii) மியுனிஸிபல் கௌன்ஸிலின் அக்கிராசனாதிபதி, அல்லது டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரெஸிடென்ட், அல்லது வியாதியஸ்தரை அனுப்பும் உத்தியோகஸ்தருக்கு அடுத்து மேற்பட்டுள்ள உத்தியோகஸ்தர்.

ஏ. டி. க்ராம்பி,
கவர்ன்மெண்ட் டெப்யுடி ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

---

* வியாதியஸ்தர் தனிமையாய்ப் பிரயாணஞ் செய்யக்கூடியவராயிருந்தால், கடிதம் அனுப்பும் உத்தியோகஸ்தரானவர் - கீழ்க்கோடிட்ட வார்த்தைகளை அடித்துவிட்டு அதற்கு இனிஷல் போடவேண்டும்.

† II-B அனுபந்தத்தைப்போலவே ; ஆகையால் அச்சிடப்படவில்லை.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.